அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 7 இதழ் 11 விலை அ. 4	மன்மத ஸூ மாசி மீ பிப்ரவரி-மார்ச்—1956	வருட சந்தா ரூ. 2-4-0

அடியார்க்குத் தொண்டாற்றி சைவம் காத்த
அன்பின் அமைச்சர் குலச்சிறையார்
(பெரிய புராணச் சித்திர விளக்கம் 23; பக்கம் 509)

பொருளடக்கம்

பக்கம்

1. காதல் வழி (திருப்புகழ் மணி) ... 481
2. கந்தர் அநுபூதி (கி. வா. ஜகந்நாதன்) ... 484
3. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் (சே. த. ராமலிங்கம் பிள்ளை, பி.ஏ., பி.டி.) ... 486
4. உள்ளமே கோவில் (அ. ராமமூர்த்தி) ... 493
5. அமிருத மொழி (ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா) ... 497
6. மங்களா சாஸனம் (அன்பன்) ... 500
7. மரணபயம் வேண்டாம் (ஆனந்தன்) ... 505
8. குலச்சிறை நாயனர் (கி. வா. ஜகந்நாதன்) ... 509
9. மகத்தில் வந்த மகவு (ரசபதி) ... 511
10. Back Waters of Ananda (*Thiruppugal Mani*) ... 526

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட, ரூ. 2—4—0. நான்கு வருடச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில் லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ முதல் உள்ள முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தா தாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 7	மன்மத ஹூ மாசி மீ பிப்ரவரி—மார்ச் - 1956	இதழ் 11

காதல் வழி

(திருப்புகழ் மணி)

ஞானசம்பந்த மூர்த்திகள் தேவாரத்தில் உலகுக்கு உபதேசிக்கின்றார்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே"

நமச்சிவாய என்ற நாமத்தின் பெருமையை இவ்வாறு வகுத்தார். மேலும் அதன் மேன்மையை இந்தப் பதிகத்தில் பின்வரும் ஒன்பது பாக்களில் கூறினர். 'நமச்சிவாய' என்கிற நாமம் ஒரு தத்துவத்தைக் குறிக்கின்றது. அந்தத் தத்துவம் கடவுளே யாகும். வேதங்கள் தேடுகின்ற பொருளாம். மெய்ப் பொருளாம். அப்பொருளை அடையும் வழியில் கசிந்து உருகி பக்தியினால் கண்ணீர் பாய காதலிக்கும் அடியார்களை ஏற்றி விடுகின்றதாம்.

அளவு கடந்து நின்ற ஆண்டவன்பால் கொண்ட அன்பே காதலாகும். இந்தக் காதல்கொண்டு பார்வதி

ஆதியே சோதி ஆறுமுக மெய்ச்சொருப
நீதியே என்பாசம் நீக்காமை நீதியதோ

பரமசிவனை வரித்து மணந்தாள். மணவாளன் மண வாட்டி இவர்களுடைய காதல் போலன்று ஞான சம்பந்தர் மொழிந்த காதல்.

பரமசிவன் பார்வதியை மணக்கு முன்னேயே மன்மதன் சாம்பலாக்கப் பட்டான். ஆண் என்றும், பெண் என்றும் தோற்றும் வகையில் இவர்களுக்கு பரஸ்பரம் ஏற்படும் ஓர் மன இழுப்பை ஜட உலகத்தில் 'காதல்' என்றும், அதற்கு உட்பட்டவர்களை காதலன், காதலி என்றும் வழங்கப்படுகின்றன.

ஆண்பால், பெண்பால் இந்த இருவகைப் பாலில் சம்பந்தப்படாத அன்பு, எவ்வளவோ விதமாக உலகின் கண் காணப் படுகின்றது. உதாரணமாக தாயும் சேயும், தந்தையும் மகனும், அண்ணனும் தம்பியும், சகோதரன் சகோதரியும், மேலும் அனேக வகைகளில் இருவர்களுக்கு ஏற்படும் அன்பைக் காணலாம்.

இப்படி ஏற்படும் அன்பின் கிளர்ச்சியில் மன்மதன் இறந்தே நிற்கின்றான். ஆகவே, மன்மதனல் ஏற்படு கின்ற ஆண், பெண் என்ற இருபாலின் உணர்ச்சி யற்ற உள்ளங்களில் தோன்றுவதே 'தூய்மையான காதல்.' உலகெலாம் நிறைந்து ஜீவராசிகளை யெல் லாம் காக்கின்ற பரமசிவன் மேல் பார்வதி அன்பை வைத்தாள். ஆனல் அந்த அன்பு மன்மத விகார மற்ற அன்பு. அந்த அன்பு பக்தர்கள் பகவானிடத்தில் கொள்ளும் அன்பு. மன்மத விகாரமற்ற காதல் எனக் கூறலாம். இந்தக் காதல் தெய்வீகக் காதல். இந்த தெய்வீகக் காதல் வாயிலாய் ஏற்பட்டது பார்வதி திருமணம். சிவ புராணங்களில் கூறியதை நன்கு உணர்ந்தால் இந்த உண்மை வெளியாகும்.

குமார சம்பவம் ஏற்பட வேண்டுமென்று நினைந்த தேவர்கள், மன்மதனை ஏவி பெண்ணுசையை பரம

நித்தமும் நின்கழலென் நெஞ்சில் நிறுத்தியருள்
சித்திமிகப் பெற்றேருங்கச் செய்யாமை செம்மையதோ

சிவனிடத்தில் உண்டு பண்ண முயன்றார்கள். பார்வதி யாருக்கும், பரமசிவனுக்கும் ஏற்பட வேண்டிய காதல் மன்மத விகாரம் தாண்டிய காதலென்று தேவர்கள் உணரவில்லை. பரமசிவனுடைய தூய்மையை அண்டின காலத்திலேயே மன்மதனும், அவன் ஆற்றலும் சாம்ப லாயின. இதன் பொருள் என்னவோ?

ஈசனிடத்தில் கொள்ளும் அன்பு—பக்தி எனும் காதல்—மூவாசையைத் தாண்டிய தேவாசையாகும். தேவாசையில்தான் ஜீவாத்மா, பரமாத்மா மணம் நேரிடும். இந்த நிலையில் நடந்த தெய்வீக திருமணங் கள் புராணங்களில் அனேக இடங்களில் கூறப்பட் டுள்ளன.

வள்ளியின் திருமணம், ராதா கல்யாணம், சீதா கல்யாணம், ருக்மிணி கல்யாணம் முதலிய திருமணங்க ளெல்லாம் சான்றாகும்.

பக்தியின் பரவசத்தால் மன்மத விகார ரஹிதமான காதலின் பண்பை, உலக ஜட வாழ்க்கையிலே நிற் கின்ற மக்கள் அறிய முடியாது. மன்மத விகாரமுற்ற காதலின் கொடுமை ஒருபால் நிற்க, தெய்வீகக் காத லின் பண்போ மிகவும் மேன்மை யுற்றது. அதன் அனுபவமும் சொல்லுக் கடங்காதது.

ஆகவேதான் தெய்வீகக் காதல் பக்தர்களுக்கே உரியதென்று பாடியுள்ளார்.

குலசேகராழ்வார் பிரபந்தத்தில் பாடுகின்றார்.

"தாறுத மனக்காதல் தொண்டர்தம் குழாம்குழுமித்
திருப்புகழ்கள் பலவும் பாடி"

என்றார்.

காதலர்களாம் பக்தர்கள் தனிமையிலும், ஒருங்கு கூடிய பக்தர்கள் கூட்டத்திலும், சத் சங்கத்திலும், தாங்கள் காதலித்த தெய்வத்தை ஒருங்கே கூடி

நின்னடியை என்றும் நினைந்துருகி யான்பாட
மன்னும் அருளையெற்கு வழங்கநீ வாராயோ

அனுபவிக்கின்றார்கள். இதில் குற்றமற்ற, வழக்கு சச்சரவுகளற்ற, பொறாமையற்ற, வேற்றுமை யற்ற பண்புகள் நிறைந்துள்ளன.

மன்மத விகாரக் காதலிலோ இப்பேர்ப்பட்ட பண்புகள் காண முடியாதவைகளாகும். இந்தத் தெய்வீகக் காதலாகிக் கனிந்து, கண்ணீர் மல்கி, "நமச்சிவாய" என்ற தெய்வீகப் பொருளை அடைவீர் என்று உபதேசித்தார். இதுதான் நால்வர்கள், ஆழ்வார்களைப் பின்பற்றிய கணக்கற்ற பக்தர்கள் அனுபவ முகமாகக் காட்டிய காதல் வழி.

கந்தர் அநுபூதி

(கி. வா. ஜகந்நாதன்)

(443-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி அருணகிரிநாதப் பெருமான் இறைவனுடைய திருவருள் அனுபவத்திலே ஊறி நின்றாலும் கருணையை மறக்கவில்லை. அவனோடு ஒன்றுபடாமல் அவனுடைய கையில் கிளியாகத்தானே இருக்கிறார்....? அந்தக் கிளி பறக்கலாம்; மரத்தில் வந்து உட்கார்ந்து கொள்ளலாம்; கீழே வந்து நிலத்திலே கூடத் தத்தி தத்தி நடக்கலாமே. அந்த மாதிரி மிக உயரத்திலே பறக்கின்ற பாடல்கள் சில. மாமரத்திலே உள்ள கனியைக் கொத்துகின்ற பாடல்கள் சில. கீழே பறக்கின்ற பாடல்கள் சில. மெல்லத் தத்தித் தத்தி நடந்து பூமியிலே நடக்கிற பாடல்களும் சில. கந்தர் அநுபூதியிலே கந்தனுடைய பெருமை இருக்கின்றது; அநுபூதியினுடைய சிறப்பு இருக்கின்றது; அந்த அநுபூதி பெறாமல் வாடுபவர்களுடைய நிலையும் இருக்கின்றது; அந்த நிலை மாறுவதற்குரிய காரியங்கள் இன்ன இன்ன என்று வழி சொல்லித் தருகின்ற தந்திரங்களும் இருக்கின்றன. இவையெல்லாம் சேர்ந்ததுதான் கந்தர் அநுபூதி.

செவ்வேள் பெருமா சேவல் கொடியோனே
செவ்விசேர் நின்பதமென் சிந்தையினில் வையாயோ

ஆனால் இவ்வளவையும் படித்த பிற்பாடு நம்முடைய நெஞ்சிலே எது ஓங்கி நிற்கும்? கீழே ஒவ்வொரு படியாகச் சென்றவன் மேலே சென்றுவிட்டால் கீழ் உள்ள படியை நினைத்துக் கொண்டிருக்க மாட்டான். மேலுள்ள படியிலே நிற்பான். அப்படிக் கந்தர் அநுபூதியிலே உள்ள பாடல்களை யெல்லாம் நாம் படித்தால் நம்முடைய உள்ளத்தில் மேல் நிலத்திலே இருப்பது எது ? மற்றவர்கள் எல்லாம் செல்லாத, மற்றவர்கள் எல்லாம் உணராத அநுபவ நிலை இந்த அநுபூதியிலே இருக்கின்றது என்ற நினைப்புத் தான் வரும். எங்கும் காணாத ஓர் அதிசயத்தைத்தான் நாம் நினைப்போம். ஓர் ஊருக்குப் போகின்றோம். அங்கே வானளாவிய கோபுரம் ஒன்று இருக்கிறது. மண் குடிசைகளும் இருக்கின்றன. வேறு மாட மாளிகைகளும் இருக்கின்றன. அந்த ஊருக்குப் போனவன் மறுபடியும் தன்னுடைய ஊருக்கு வந்து அங்குள்ள ஆச்சரியத்தை யெல்லாம் நினைத்துப் பார்க்கிறான், அல்லது சொல்கிறான். "அங்கே வீடுகள் இருந்தன. மனிதர்கள் எல்லாம் காலாலே நடந்தார்கள். வீதிகளெல்லாம் இருக்கின்றன" என்று சொல்லுவான் ? " அந்த ஊரிலே எவ்வளவு பெரிய கோபுரம்! எவ்வளவு பெரிய கோவில்!" என்று மற்ற இடங்களிலே காணாத பொருளைத்தான் சொல்லுவான். அப்படி, நாம் எத்தனையோ நூலைப் படித்தாலுங்கூட கந்தர் அநுபூதியைப் படிக்கும்பொழுது ஏனைய நூல்களில் உள்ள சில செய்திகள் இருந்தாலும் அவற்றை நினைத்து பெரிதாகப் பாராட்டாமல், இதில் மாத்திரம் காணப்படுகின்ற அநுபவத் துளிகளாகிய பாடல்களை நினைந்து, "இத்தகைய உயர்ந்த பாடல்களைப் பாடிய நூல்கள் வேறு எங்கு உண்டு?" என்று விம்மிதம் அடைவோம்.

நாம் அடைகிறோமோ இல்லையோ, பெரியவர்கள் அப்படித்தான் அடைந்தார்கள். பெரியவர்களுக்குள்ளே

எந்நாளும் ஓங்கும் எழில்ஞான சித்திபெற
மன்னு தருதிவரம் மயிலூரும் பெருமானே

அநுபவசாலியும் இறைவனுடைய அநுபூதி பெற்ற பெரியோருமாகிய தாயுமானவர் அப்படி அடைந்தார். அருணகிரிநாதப் பெருமானுடைய பாடல்களையெல்லாம் அவர் பார்த்தார். பிற அநுபூதிமான்களுடைய பாடல்களையும் பார்த்தார். அநுபூதிமான்களாக இருப்பவர்களுக்குள்ளே வேறுபாடு இல்லை. அவர்களுடைய அநுபவத்தில் வேறுபாடு இல்லை. ஆனால் அந்த அநுபவத்தைச் சொல்லுகிற முறையிலே வேறுபாடு இருந்தது. எம். ஏ. பட்டம் பெற்றவர்கள் எல்லாரும் நன்றாகச் சொல்லித் தருகிறார்களா? அதனால் அவர்களுடைய பட்டத்திலே குறைவு இல்லை. எல்லாரும் நன்றாகப் படித்தவர்களே. ஆனால் படித்தவற்றைச் சொல்லிக் கொடுப்பதிலே வேறுபாடு உண்டு. அந்த மாதிரி அநுபூதிமான்களுக்குள்ளே நல்ல அநுபவத்தைப் பெற்றவர்கள் எல்லாரும் ஒரே மாதிரி தான் இருப்பவர்கள். அவர்களுக்குள் வேறுபாடு இல்லை. அந்த அநுபவத்தை உலகத்துக்குச் சொல்ல வேண்டும் என்ற கருணையும் எல்லாருக்கும் இருந்தது. அந்த கருணையை உண்மையாக நிறைவேற்றினவர்கள் மிகச் சிலரே. அவர்களுக்குள் உயர்ந்த நிலையில் இருப்பவர் அருணகிரிநாதப் பெருமான்.

அருணகிரியும்
ஐம்பூதத் தலங்களும்

(திருப்புகழ் சதுரர் S. T. ராமலிங்கம் பிள்ளை B.A.,B.T.)

(460-ஆம் பக்கத் தொடர்ச்சி)

2. திருவானைக்கா :—இத்திருத்தலத்தின் வேறொரு சிறப்பு, நம் அருணை அண்ணலைப் பிணித்தது. அதுவே 'திருநீறிட்டான் மதிள்' ஆகும்.

திருநீறிட்டான் மதிள் :

எங்கள் குலப்பெரும என்றே உனதுதிருப்
பங்கயத் தாளிணையைப் பாராமல் பார்ப்பதுவே

ஆலய அமைப்பு நமது உடலமைப்பின் விளக்கமே என்பர் ஆன்றோர். அதில் சுற்று மதில்கள் ஐந்து (பஞ்சாவரணம்), ஏழு (சப்தாவரணம்), ஒன்பது (நவாவரணம்) முதலியனவாக அமைப்பதுண்டு. ஒவ்வொரு மதிற்புறமும் ஒவ்வொரு சுற்று வீதி எனப்படும் பிராகாரம் கொண்டதாக இருக்கும். திருவானைக்காவில் ஐந்து திருமதில்களுள. ஆகவே ஐந்து சுற்று வீதிகளும் (பிராகாரங்களும்) உண்டு. அவற்றுள் நான்காவதாக நிற்கும் மதில் பெரியதும் மிக உயர்ந்ததுமாகும். அம்மதிலைத் திருநீற்று மதில், திருநீறிட்டான் மதில் எனக் கூறுவர். இதனைச் சிவனுரே கட்டினுர். அவர் ஓர் சித்தமூர்த்திகளாக எழுந்தருளினர். இம்மதில் கட்டத் தொடங்கியபின், ஒவ்வொரு நாள் மாலையிலும் வேலையாட்கள் கூலி வேண்டி நின்றால் திருநீற்றையே கூலியாகத் தருவது வழக்கம். பார்க்குமளவில் அவரவர் அன்றைய நாளில் எவ்வளவுநேரம் உழைத்து வேலை செய்தனரோ, அதற்கு உரிய ஊதியமான செம்பொற் காசுகளாக, அத் திருநீறு மாறுமாம். திருநீற்றை அள்ளி அளித்தே அழகான இம்மதிலைக் கட்டியமையால் இதற்குத் 'திருநீறிட்டான் மதில்' என்ற பெயர் வந்தது.

''அகில காரணர் வினைஞர்பால் பூதியை அளித்து
முகில் சுலாவ நன்கிழைத்த மா மதில்'' (ஆனைக்காப் புராணம்)

இவ்வுலகில் சிறந்த வரங்களை எல்லாம் பெற விரும்புவோர் இதனை மிக்க அன்பால் வலம் வந்து வழிபட வேண்டுமாம்.

"வரங்களை வேட்டோ ரெல்லாம்
மெத்திய அன்பால் இந்த வியன்மதில் சூழ்க''
(ஆனைக்காப் புராணம்)

இதனை நம் சந்த முனிவர்,

"ஆழித்தேர் மறுகில்பயில் மெய்த்திரு
நீறிட்டான் மதிள் சுற்றிய பொற்றிரு
ஆனைக்காவினில் அப்பர் ப்ரியப்படு-பெருமாளே''

சித்தர் குலமணியே சித்தம் கனிந்தெனக்குச்
சத்தி மிக அருளச் சற்றிரங்கல் ஆகாதோ

(ஆழித்தேர் அருமை வீதியில் ஓடும் சிவத் திருநீறிட்டான் மதில் சூழும் அழகிய ஆனைக்காவின் அண்ணலுக்கு இனிய பெருமானே) எனக் கூறுவதை நோக்குங்கள்.

சம்புதடாகம்:

திருவானைக்காவில் ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன என்று தலபுராணம் கூறுகிறது. பெருமான் சந்நிதிக்கு தென்கிழக்கு மூலையாகிய அக்கினி மூலையில் உள்ள தீர்த்தத்திற்குச் சம்புதீர்த்தம் - சம்புதடாகம் என்று பெயர். இது சம்பு முனிவனால் ஏற்பட்டது. இதில் மூழ்கி வழிபட்டு அம்முனிவன் இறைவன் இயற்கையினை எய்தினன். ஆகவே அம்முனிவன் பெயரால் அத்தடாகம் வழங்கப் பெறுகின்றது.

"சம்புமுனி என்றொருவன்
சந்நிதிக்குப் பாவகன் மாதிரத்து
பூ அலர்ந்த ஒருதீர்த்தம் புகுந்தாடி"
"எமதியற்கையினைத் தலைப்பட்டான்
ஆதலினால் அங்கதற்குப் பெயர் சம்புதீர்த்தம்
என்றுயது மாதே"

(தலபுராணம் தீர்த்தவிசேடம்)

சுந்தரமாறன் மதில்:

இது சம்புதீர்த்தத்தின் தென்பாலுள்ளது. இது சுந்தரபாண்டியன் என்பவனால் கட்டப்பட்டது. இம்மதில் திருநீறிட்டான் மதிலைச் சார்ந்துள்ளதாகலாம். இந்த வரலாற்றையும் மறவாத நம் அருணகிரிப் பெருந்தகையார், இம்மதில் உள்ள இடமும், ஆக்கியோரும், இத்திருப்பணியும் என்றும் அழியாதபடி திருப்புகழில் அமைத்து விட்டனர்.

"துங்க கஜா ரண்யத்தி லுத்தம
சம்பு தடாகம் அடுத்த தக்ஷிண
சுந்தர மாறன் மதிட்புறத்துறை பெருமாளே"

ஏகாந்த மாயிருக்கும் ஈசசுதா உன்பதத்தை
ஏகாக்ர சித்தமொடு ஏத்திடநீ எண்ணுதியோ

[தூய ஆனைக்காவிலுள்ள அண்ணலே! சம்புதீர்த்தத்தினை அடுத்த தென்பாலுள்ள சுந்தரமாறன் மதில்புறத் தமர்ந்தருளும் பெருமாளே!]

என்பதிலிருந்து, நமது திருப்புகழ் ஆசிரியர் தோத்திர, சாத்திர, சந்த மணங்கமழும் செந்தமிழ்ப் பாடலில் வரலாற்று நுட்பங்களேயும் மறவாது அமைக்கும் மாண்பு நன்கு புலனுகின்றது.

பேறுபெற்றோர்:

முன்னே கூறியவர்கள் போக இங்கு பராசரன், அகத்தியன் என்ற முனிவர்களும், தேவர்களும், சூரிய சந்திர, அக்னி என்ற முச்சுடர்களும், இராமன், உறையூர்ச் சோழன் முதலிய அரசர்களும் வந்தித்துப் பேறு பெற்றனர். இதனை,

"சம்பு மாதவன் பராசரன் தாமரைக் கிழவன்
கும்ப மாமுநி தினகரன் குளிர்மதி இராமன்
உம்பர் கோனழற் கடவுளென் றிவர்க்கெலா முவந்து
தம்பி ரானருள் தழைதரக் கொடுத்த தித் தலமே"
(ஷை தலபுராணம் திருமால் வழிபடு படலம்)

என்பதாலறியலாம்.

நம் செந்தமிழ் நாவலர் இங்கு வணங்கிப் பேறு பெற்றவர்களைக் கூறும்போது,

"கமலனும், ஆகண்டலாதி அண்டரும்,
எமது பிரான் என்று தாள் வணங்கிய
கரிவனம் வாழ் சம்புநாதர் தந்தருள்—பெருமாளே"

என்கிறார்.

[பிரமனும், ஆகண்டலன் (இந்திரன்) முதலிய தேவரும், எம்பிரான் என அடிபணிந்த ஆனைக்(கரி) கா (வனம்) வாழும் சம்புநாதர் ஈன்றருளிய பெருமாளே].

பிற குறிப்பு:

இங்குள்ள பெருமானை உறையூர்ச் சோழன் வழிபட்டதாக ஒரு வரலாறு கேட்கப் படுகிறது. அம்மன்னன் மார்

தீக்குணங்கள் தீண்டாத் திடச்சித்தம் தந்தெனக்கு
ஊக்கம் அளிப்பாய்நீ ஊங்காரம் ஆனேனே

பில் ஆரமணிந்து காவிரியில் நீராடினன். அது நழுவி ஆற்றில் விழுந்துவிட்டது. சோழர் பிரான் "சிவனே! இதனை ஏன்று கொள்க" என வேண்டினன். அந்த ஆரம் திருமஞ்சனக் குடத்தில் அகப்பட்டு, பெருமானை அபிஷேகிக்கும்போது இறைவன் திருமேனியில் வீழ்ந்து தங்கியது. இது கண்ட சோழன் தளர்வு நீங்கி ஆண்டவனருள் பெற்றான். இவ் வரலாற்றை நமது ஆளுடைய நம்பி,

"தாரமாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்து
நீரினின்று அடிபோற்றி நின்மல கொள்ளென ஆங்கே
ஆரங் கொண்ட எம்மானைக் காவுடை ஆதியை நாளும்
ஈரமுள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடையாரே"
"ஆரம் நீடேந்தினுன் ஆனைக்காவு சேர்மினே"

எனப் போற்றினர். இதனைச் சேவையர் காவலராகிய தெய்வச் சேக்கிழாரும் கூறுவது காண்க.

"வளவர் பெருமான் திருவாரம் சாத்திக் கொண்டு வருபொன்னிக்
கிளரும் திரைநீர் மூழ்குதலும் வழுவிப் போகக் கேதம் உற
அளவில் திருமஞ் சனக்குடத்தி லதுபுக்காட்ட அணிந்தருளித்
தளரும் அவனுக்கு அருள்புரிந்த தன்மை சிறக்கச் சாற்றினர்,
(பெரிய புராணம்)

சிறப்புகள் :

இத்தகைய பல்வேறு சிறப்பமைந்தது ஆனைக்கா என்ற அற்புத தலம் ஆகும் என நிறுத்தி, அருணகிரி முனிவர் இத்தலப் பாடல்களில் கூறும் சிறப்புரைகள் சில ஆராய்வாம்.

1. ஒரு பாடலில் விநாயகப் பெருமான் சிறப்புக்கள் அனைத்தையும்

"குஞ்சர மாமுக விக்கினப்ரபு
அங்குச பாச கரப்ர சித்தனெர்
கொம்பன் மகோதரன் முக்கண் விக்ரம—கணராஜன்
கும்பிடு வார்வினைப் பற்றறுப்பவன்

பன்னிரண்டு கண்ணினனே பாவாணர் போற்றுறுநீ
என்னகத்தில் என்றும் இருந்தருளல் செய்யாயோ

எங்கள் விநாயகன் நக்கர் பெற்றருள்
குன்றைய ரூப கற்பகப் பி(ள்)ளே''

[வேழமுக விக்னராஜன், அங்குச பாசகர ப்ரசித்தன், ஒற்றைக் கொம்பன், பெருவயிறன், முக்கண்ணுடைய வலிய கணபதி, வணங்குவார் வினைப்பாசம் அறுப்பவன், எமது விநாயகன், சிவனுரீன்ற மலைவடிவன் ஆகிய கற்பகப் பிள்ளை(யார்)]

என்று கூறுவது அழகாயிருக்கிறது.

2. இனித் தேவியின் சிறப்புப் பேசத் தொடங்கி

''கொம்பனை நீலக் கோமளை அம்புய மாலைப் பூஷணி
குண்டலி ஆலப் போசனி—அபிராமி
கொஞ்சிய வானச் சானவி சங்கரி வேதப் பார்வதி
குன்றது வார்பொற் காரிகை''

[பூங்கொம்பனைய அழகிய நீலநிறத்தி, தாமரை மாலையணிந்தவள், குண்டலிசத்தி, விடமுண்ட அபிராமி, கொஞ்சும் சுரநதி போலும் தூயவள், சங்கரி, மறைபோற்றும் பார்வதி, பொன்மலை(வில்) ஏந்திய காரிகை.]
எனப் புகழ்வது காண்க.

3. யோக நெறியில் பெறும் பிராண வாயுவை அடக்கிக் கபால மூலாதாரம் நேராகப் பொருந்த ஓட்டிப் பிடித்து எங்கும் ஓடாமல் சாதிக்கும் அசட்டு அனுசார ஹடயோகத்தை வெறுத்து, மலமாயா கன்ம உபாதிகளை ஒழித்து ஞானசாரம் பூண்டு, நான் வேறு, உடல் வேறு, உலகிலே எவையும் வேறு என்று பற்றற்றுச் சிந்தையும் செல்லாததாய் அதீத நிலையில் சிவசொரூப மஹா யோகியாக்கி எளியேனை ஏன்று கொள் என்ற கருத்தை 'அனித்தமான ஊன்' என்ற திருப்புகழில்

தன்னுள்ளே தங்கும் தனிப்பெரும் சோதி! நினை
உன்னும் உயர்ந்தோர் உறவருள வாராயோ

"மலமாயை-செனித்த காரியோபாதி ஒழித்து ஞானஆசார
சிரத்தையாகி யான்வேறெ—னுடல்வேறு
செகத்தியாவும் வேறாக நிகழ்ச்சியா மனோதீத
சிவச் சொரூப மாயோகி—என ஆள்வாய்"

என விளக்குகிறார்.

4. விசாகப்பிரானது ஞானசக்தியாக விளங்குவது வேல். அதனை அவன் வலம் பெற வலத்தோளில் அணைத்துள்ளான். அத் தோள் மண நாறும் திருத்தோளாகக் காட்சியளிக்கிறது. போர் என்றால் வேல் எடுப்பான். அந்த வேல் கொண்டு செய்யும் திறமையைப் பாடத் தொடங்கினால் உரைப்பார் உளத்தில் உன்னியவை அனைத்தையும் அருள்கின்றான்.

"ஏலம் வைத்த புயத்தி லணைத்தருள்
வேலெடுத்த சமர்த்தை உரைப்பவர்
ஏவருக்கு மனத்தில் நினைப்பவை—அருள்வோனே

என்று தெரிவிக்கிறார்.

குமரப்பிரானார் உயிர்கள் பிறவிக் கடலில் ஆழாமற் காத்துத் திருவடிப் புணையில் (படகில்) ஏற்றி முத்தியங் கரையில் சேர்க்கின்றார். அவரது திருவடி ஓடம் என்பதனை, "எனதிதய உருவுடைய மலினபவ ஜலராசி ஏறவிடும் உறுபுணை" என்று சீர்பாத வகுப்பும், அந்த ஓடத்தை விட்டு உதவி புரிபவன், "ஏழு பிறவிக் கடலை ஏறவிடு நற் கருணை ஓடக்காரன்" என்று திருவேளைக்காரன் வகுப்பும் பேசும். அவன் தேவலோக மீகாமன் என்று திருவானைக்கா திருப்புகழ்,

"சுவர்க்கலோக மீகாம சமஸ்தலோக பூபால
தொடுத்த நீப வேல்வீர"

எனப் பாடுகிறது. கடலில் வீழ்வாரை ஓடத்திலேற்றிக் கரையில் சேர்க்கவே செவ்வேள் சீரலைவாய் என்னும் கடலடிக்கும் கரையுள்ள செந்திலை இருக்கையாய்க் கொண்

தன்னறிவு என்பால் தழைத்தோங்க ஆதரவு
அன்னையுமை பாலா அளிப்பாய் அளியோனே

டான் என்ற ஆதி சங்கரரது ('சிந்து தீரேய ஆஸ்தே') திருவாக்கும் இங்கு நினைக்கத் தக்கது.

குகப் பரமனின் மணநாறு சீறடியின் பரத்துவத்தை, "ஓலமறைக ளறைகின்ற ஒன்றது" என்ற பாசுரத்தில் மிக விளக்கமாகக் கூறியிருப்பது படித்து மகிழத்தக்கது.

தொகுப்புரை: ஆனைக்கா இருப்பிடம், தலச்சிறப்பு, வரலாற்று நுட்பம் முதலிய பாடிய நாவலர், நம்மைப் பிறவியினின்று கரையேற்றுவதும், காலன் அணுகாதபடி கழலை மறவாதிருக்க உதவுவதும், இன்னும் இவை போலவன பிறவுப் பாடிப்பாடி மகிழ்கிறார். ஏன் எனில்,

"பாடற் காதல் புரிவோன்"

(பாடலில் ஆசை கொள்ளும் பரமன்) ஆனைக்காவிற் பெருமானே என அவரே அருளியது நோக்குக.

ஈனப் பிறவி வீடேறுமாறு நமது சந்தமுனிவர் ஆனைக்காவின் அண்ணலைப் புகழ்ந்த சிறப்பை ஒருவாறு முடித்து, மூன்றாம் பூதமாகிய அக்கி தலமாகிய திருஅண்ணுமலைக்குச் செல்வோம். (தொடரும்)

உள்ளமே கோவில்

(அ. ராமமூர்த்தி)

"அகண்டமான இறைவனுக்கு அகண்டமான ஆலயம் எழுப்பவேண்டும்" என்று எண்ணினன் ராஜராஜ சோழன். எண்ணம் செயலாகப் பரிணமித்தது. ஆயிரக்கணக்கான கலைஞர்களும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகளும் பக்தி சிரத்தையுடன் ஒன்று சேர்ந்து பல்லாண்டுகள் உழைத்துப் பிரம்மாண்டமான கோவில் ஒன்றை நிர்மாணித்தார்கள். அதுவரை எங்கும் அவ்வளவு பெரிய கோவிலை எவரும் கற்பனையிலேகூடக் கண்டிருக்க

வித்தகச் சத்திவடி வேலவா நின்மலராம்
சித்தருளத் தாடும் சிவமயநின் னடைக்கலமே

முடியாது என்று எண்ணி இறுமாந்திருந்தான் மன்னன் ராஜராஜன். வானளாவிய கோபுரம், அழகும் உறுதியுங் கொண்ட நாற்புற மதில்கள், சிந்தனைக்கு நிரந்தர விருந்தாக விளங்கும் சிற்பங்கள், விசித்திரமான சித்திரங்கள், பெரிய திருவுருவோடு கூடிய நந்தி, இலிங்க வடிவமான இறைவன், இவற்றைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போனான். தஞ்சையும் தானும் சரித்திரத்திலே தனியிடம் பெற்றுவிட்ட திருப்தி அப்பொழுதே அவனுக்கு ஏற்பட்டு விட்டது!

திருப்பணி வேலைகள் ஒருவாறு முடிவுற்றன. கும்பாபிஷேக வைபவத்திற்கு நாளும் குறிக்கப்பட்டது. அந்தக் கும்பாபிஷேக வைபவத்திற்கு அன்றைய தமிழ்நாடு முழுவதும் எதிர்பார்க்கப் பட்டது! தஞ்சையின் அந்த கோலாகல புனிதக் காட்சியைக் காண பேரார்வத்தோடு குறிப்பிட்ட நாளை எண்ணிக் கொண்டிருந்தான் மன்னன். இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை யல்லவா?

கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் இரவு. உரிய நேரத்தில் எல்லாம் நடக்க ஏற்பாடு செய்துவிட்டு சயனித்துக் கொண்ட மன்னனுக்குத் தூக்கம் சரியாக வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துவிட்டு நள்ளிரவிற்குப் பிறகு சற்றே கண்ணயர்ந்தான். கனவிலே சிவபெருமானின் திருவுருவம் மங்கலாகத் தோன்றியது! அது மட்டுமா? இறைவன் பேசவும் தொடங்கினான்.

"மன்னா! நான் கூறுவது உனக்கு வருத்தத்தையும் திகைப்பையும் அளிக்கு மென்பதில் சந்தேகமில்லை. என்ன செய்வது? நீ துரதிஷ்டசாலி. நாளைய தினம் தஞ்சைக் கோயில் கும்பாபிஷேகத்திற்கு நான் என் சாந்நித்தியத்துடன் எழுந்தருள முடியாது. உன் கும்பாபிஷேக தினத்தை மாற்றிக் கொள். ஏனென்றால் நாளை நான்

சித்தானு பூதியைச் சீக்கிரம் யான்பெறவே
சித்தம் இரங்குதியோ செம்மான் மருகோனே

கருவூரில் எனது பக்தனின் பெருங் கோயில் கும்பாபி ஷேகத்தை ஏற்கவேண்டும். அவன் கட்டியிருக்கும் கோயில் தஞ்சைக் கோயிலைவிட பெரியதும் புனிதமானது மாகும்."

இவ்வாறு கூறிவிட்டு இறைவனின் தோற்றம் திடீரென்று மறைந்துவிட்டது. மன்னனின் கனவும் கலைந்தது. சிந்தனை விசுவருப மெடுத்தது.

"என்ன! கருவூரில் ஒரு பெரிய கோயிலாமே! நான் இதுவரை கேள்விப்படவே இல்லையே! என்னைவிடப் பெரிய பக்தருமாமே! இது பெரிய புதிராகவன்றோ இருக்கிறது!—மன்னன் ஒன்றும் புரியாது திகைத்தான். உடனே எழுந்து மந்திரி பிரதானிகளை விசாரித்தான். கண்ட கனவினை வர்ணித்தான்.

கருவூரில் அந்தச் சமயத்தில் ஒரு சிறிய பிள்ளையார் கோயில்கூடக் கிடையாது என்று எல்லோரும் ஏகோபித்துக் கூறினர்கள். "எதற்கும் நாமே நேரில் போய்ப் பார்த்து விடுவோம்" என்று மன்னன் அப்பொழுதே கருவூருக்குக் கிளம்பினன். ஏனையோரும் ஆவலுடன் உடன் சென்றனர்.

திடீரென அரசனும் பரிவாரங்களும் வருவதைக் கண்ட கருவூர் மக்கள் காரணம் புரியாமல் கலங்கினர்கள். கோபுரமோ கோயிலோ காணப்படா ஏமாற்றத்தோடு, இங்குப் பெரிய கோயில் ஒன்று உள்ளதாமே. அதற்கு இன்று கும்பாபிஷேகமாமே! அப்படி ஏதாவது உண்டா?" என்று வினவினன்.

"கோவிலாவது, கும்பாபிஷேகமாவது! அரசே! தாங்கள் கண்ட கனவு முற்றிலும் அர்த்தமற்றது. இங்கு அம்மாதிரி எதுவுமே கிடையாதே" என்றனர் மக்கள்.

"இங்கு யாராவது சிவபக்தர் இருக்கிருரா?" என்று ஆவலுடன் கேட்டான் அரசன்.

யோக்வழி நின்றுநான் யோகதனம் பெற்றுய்வ(து)
ஏகனே எந்நாள் இயம்பி யருளாயோ

" ஆம்! ஒருவர் இருக்கிறார். அதோ அந்த மரத் தடியில் மணல் மேட்டில் அமர்ந்து தியானித்துக் கொண் டிருக்கிறாரே அவர்தாம்"—என்று கூறினர் மக்கள்.

உடனே அரசன் அந்த மரத்தடிக்கு விரைந்தான். அந்த அடியவரை வணங்கினான். தியான நிலை நீங்கிய அப் பெரியார், அரசனை ஆசீர்வதித்து வந்த காரணம் யாதென வினவினார். இரவு தான் கண்ட கனவை உள்ளது உள்ள படி உரைத்தான் அரசன். அவ்வளவுதான்! அந்த அடியார் எழுந்து ஆனந்தக் கூத்தாடினார். கண்களில் நீர் பெருக, உள்ளக் களிப்பு மேலிட தன்னிலை மறந்து, " என்னே நான் செய்த பாக்கியம்! என் கோயில் கும்பாபி ஷேகத்திற்கும் எழுந்தருள்கிறானு! ஆஹா! இன்றே நான் பெரும்பேறு எய்தினேன்" என்று தாண்டவமாடினார்.

மன்னன் பின்னும் வற்புறுத்தவே அந்த அடியார் கூறலுற்றார்.

" அரசர் பெருமானே! இறைவனுக்கு அகண்டமான ஆலயம் ஒன்று எழுப்பவேண்டுமென்ற அவா பல ஆண்டு களாக எனக்கு இருந்தது. ஆண்டியாகிய என்னால் அது எப்படி சாத்தியமாகும்? பொன்னுக்கும் பொருளுக்கும் நான் எங்கே செல்வேன்? அதற்காக மனத்தாலேயே எண்ணி யெண்ணி, எம்பிரானுக்கு கற்பனைக் கோயி லொன்று சிந்தனையையே அஸ்திவாரமாகக் கொண்டு பக்தி சிரத்தையுடன் கட்டி முடித்தேன். இன்றுதான் அக் கோயிலுக்கு மானஸீகக் கும்பாபிஷேகம் செய்வதென்று தீர்மானித்திருந்தேன். என் கோயில் எம்பிரானுக்கு அர்ப்பணமாகிவிட்டது. நான் இன்றே பிறவிப் பெரும் பயன் எய்தினேன். இச் செய்தியைக் கூறிய நீ நீடு வாழ்க" என்றார்!

ராஜராஜன் அடியற்ற மரம்போல், ஆனல் உணர்ச்சிப் பெருக்குடன் வீழ்ந்து அப் பெரியாரை வணங்கினான்.

சம்புவிழி ஆறினிலும் சம்பவித்த சண்முகனே
அம்பிகையின் கண்மணிநின் அன்புமணி யாவேனே

கல்லாலும் மண்ணாலும் கட்டியது எவ்வளவு பெரியதும் பெருமையானது மாயினும், உள்ளத்தால் அமைந்த கோயிலே உயர்ந்தது என்ற உண்மையை உணர்ந்தான்.

"உள்ளக் கோயிலே உண்மைக் கோயில்" என்ற உண்மையின் திருவுருவாக, இன்றும் கருவூரார் தஞ்சைப் பெரிய கோயிலிலேயே இறைவனுக்குப் பின்னால் இன்றும் விளங்குகிறார்.

அமிருத மொழி

(ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா)

மதாலஸா எனும் தாய், மகனை அலர்க்கனுக்கு உபதேசிப்பதாக மாமுநி வியாஸர் மார்க்கண்டேய புராணத்தில் கூறுகிறார். ஆசார்யதேவோபவ: குருவில்லாக் கல்வி கானல் நீருக்கொப்பாகும். நற்குருவை நாடு! குருவே மந்திரம்! மந்திரமே கடவுள்! இம்மூன்றும் ஒன்றே! அதில் பேதம் பாராட்டாதே! குருவின் அருளிருந்தால்தான் இறைவன் அருளைப் பெறலாம்! தேவத்ரோஹிக்குக் கூட குருவின் அருளால் நற்கதி உண்டு. குருத்ரோஹிக்கு நற்கதியே இல்லை! உனது பெற்றோர் அளித்த உடல் ஐம்பூதங்களால் ஆகியது; ஆசார்யன் அளித்த தேஹமோ அறிவு மயமானது! தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது.

அற்பமான தொழிற் கல்விக்குக் கூட ஒரு குரு வேண்டும். ஆன்ம வித்தைக்கும் ப்ரும்ம வித்தைக்கும் குருகடாக்ஷம் வேண்டுமெனக் கூறவும் வேண்டுமா? குரு பணிவிடையே தவம்! குருபக்தனுக்கு இறைவன் விரைவில் இரங்குகிறான். குசேலனுக்கு செல்வம் தந்த ஸ்ரீபதி கூறுகிறார். குரு பணிவிடையால் நான் ஸந்தோஷிப்பது

உம்பர் துயர் தவித்து உய்வித்த வீரா உன்
அம்புயத் தாளடைந்தார் ஆநந்தம் ஆவாரே

போல் வேறெதனுலும் ஸந்தோஷிக்க மாட்டேன்! அந்த ஒரு புண்ணியத்திற்காகவே அவனுக்கு அளவற்ற செல்வம் தந்தார். சற்குருவைத் தேடு! அவன் திருவடியை நாடு!

ஸத்குருவைத் தேடிப் பிடி! குருவை சரணமடைந்த பின் அவருடைய குண தோஷங்களை விசாரிக்காதே! நீ அவருடைய திருவடியை நம்பினல் அதுவே உன்னைக் கரை ஏற்றும்! குரு திருவடிகளே சரணம் என்று நதியைக் கடந்தான் சீடன், அதைக்கண்டு என் திருவடிகளே சரணம் என்ற அசட்டுக் குரு கடலை அடைந்தார். செல்லாக் காசை, போலிப் பணத்தைப் பெற்றவன் ஏமாறுவான்! பொருளை இழப்பான்! வழக்கிலும் சிக்குவான்! அஸத் குருவை அடைந்தவனுக்கும் அதே கதிதான்! குருடும் குருடும் கூடி குழி விழுவது போலாம் என்ருர் திருமூலர் திருமந்திரத்திலே.

தன்னை மறந்து, தன் உடலை மறந்து குரு பணிவிடை செய்! குருவின் அருள் தானே சுரக்கும். கடவுள் கண்ணைத் திறக்கும். பெறவேண்டியதைப் பெறுவாய். குருவின் காலைப் பிடிக்கும்போது இரு கரங்களை இழந்தான் கார்த்த வீர்யன். அதன்பின் ஆசார்யன் அருளால் ஆயிரங் கைகளைப் பெற்ருன். நம் முன் அவர் பேசுவதால், நம்மைப் போலவே உலக வேலைகளில் ஈடுபடுவதால், அடிக்கடி பழகுவதால் குருவைத் தெய்வமாக நினைக்க மனம்வராது! நம்மைக் கடியும் இவரே தெய்வம் என எண்ணுக. இறைவனிடத்தில் இருப்பதுபோல் குருவினிடம் பக்தி உள்ளவனே மஹாத்மா. அவனுக்கே கசடற தத்துவம் விளங்கும் என சுவேதாச்வதர உபநிஷத் வர்ணிக்கின்றது. படிப்பே இல்லாத பத்மபாதன் குரு பணிவிடையால் உயர்ந்த ஞானியானன். குரு அழைத்தவுடன் உயிரை, உடலை பொருட்படுத்தாமல் ஓடோடி வந்து வெள்ளத்திலே

தீய நினைப்பெனது சிந்தையினில் சேராத
நேயம் அருளிஅடி நிழலளிப்ப தெந்நாளோ

இறங்கினன். அவன் அடி வைக்கும் இடத்தில் பொற்றாமரைப் பூ வைத்துக் காத்தது தெய்வம். அதனால் பத்ம பாதன் ஆனன் அவன்.

குருவை ஒருமையில் நீ என அழைப்பவன் சுடுகாட்டிலே மரமாவான். குருவான வஸிஷ்டரின் அருளால் இக்ஷ்வாகு அரசன் பெண்ணைப் பிறந்த குழந்தையை ஆணாக மாற்றிக் கொண்டான். குருமொழி கேளாத திரிசங்கு விண்ணும் மண்ணுமின்றி இடையிலே தொங்குகிறான். குருத்ரோஹியின் கதி இதுதான் என உலகத்தவருக்குத் தன் நிலையால் இன்னும் உபதேசிக்கிறான். குருவினிடம் பொய் கூறிய கர்ணன் சாபத்திற்கு ஆளாயினன். மனமார குருவை எதிர்க்காதே! பொய் கூறாதே! முருகனது அம்சாவதாரமாகத் தோன்றியவர் குமாரில பட்டர் என்பவர். வேதத்தை நிலைநாட்ட அவனியில் தோன்றினவர். ஜைந மதத்தைக் கண்டித்த அதை நன்கு அறியவேண்டும். பௌத்தரோ மற்றவருக்குக் கூறுவதில்லை. ஆகவே தான் ஒரு பௌத்தர் என்று கூறி பௌத்த குருவிடம் கல்வி பயின்றார். அவருக்கு எண்ணெய் தேய்த்துப் பணிவிடை செய்தார். பௌத்த குரு வேத நிந்தை சிவ நிந்தை செய்யும்பொழுது முருகன் கண்ணீர் வடித்தார். இதைக் கண்டு ஐயம் கொண்ட குருவை விட்டு விலகினர். பௌத்த மதத்தை மிகத் திறமையாகக் கண்டித்தார். வேதத்தை உலகிலே நிலை நாட்டினர். முடிவில் தான் குருவினிடம் சொன்ன பொய்க்காகத் தீக் குழியில் இறங்கினர். சிவ அவதாரமான சங்கராச்சாரியார் அவரை எழுப்ப முயன்றார். மனமார செய்த பாபத்திற்கு மனமாற ப்ராயச் சித்தம் செய்துகொள்வேன். தடுக்காதீர் என்றார். குருபக்தி இஃதன்றோ?

மனமணியா உள்ளுறையும் மாதேவர் மைந்தா! உன்
இனமணியா என்னை இயைவித்தா லாகாதோ

மங்களா சாஸனம்

(அன்பன்)

நீராடுகின்றார். அதன் பின் உலர்ந்த உடையை உடுத்துகின்றார். சூழும்படி மேலாடையை இடையில் சுற்று கின்றார். சமய சின்னம் தரிக்கின்றார். பன்னிரு நாமமும் படிக்கின்றார்.

ஆண்டவனே! பிரபோ என்று அழைக்கின்றார். எட்டுறுப்பும் நிலம் தோய இறைஞ்சுகின்றார். உயர்ந்த துளசி மணி உருள, எம்மானை இருந்து எண்ணுகின்றார். இவர்கள், பரம பக்த சிகாமணிகள் என்று நமக்குப் படுகின்றது அல்லவா!

வழிபாட்டுக் கடன் முடிந்த பின், நாரணன் அடிமைகள் நாம்! எங்குமுளன் அந்த எம்மான் என்பதை அடியொடு மறந்து விடுகின்றார். சிந்தனையில் சேறு. மோகத்தில் முனைப்பு. தம் தவறுகளை அறியான் அந்தத் தற்பரன் என்று எண்ணுகின்றார்களோ என்னவோ! மதிக்கும் மனத்தில் மாதவன். வாழ்த்தும் வாயில் வரத ராஜன். ஆக்கை முழுதும் அந்த ஆதிமூலத்தின் ஆட்சி. இதை மறந்து விவகரிப்பதால்தான், இன்றைய உலகம் இடர்ப்படுகின்றது.

எம்பெருமானே! உனக்கு அடியோம் என்று வாயால் சொன்ன நாள் முதல், அச் சொற்பொருளை உணர்ந்து உணர்ந்து உள்ளம் உருகுகிறோம். இது எங்கள் செய்தி! அதனிலிருந்து அணுவளவும் மாற மாட்டோம். அதன் பயனாக, எங்கள் பரம்பரைக்கு உய்திக்கான சூழ்நிலைகள் உருவாயின. சிறந்த வீடு பேறு சித்தித்தது. இவ்வுணர்வு எப்போதும் எம்மில் இருக்க, இடையறாது உன் பிரபாவத்தை எண்ணுவம்.

பண்ணுளர் பாடும் பழம் பொருளே ஈராறு
கண்ணுளா என்னைக் கடைக்கணித்தால் ஆகாதோ

வட மதுரையில் வாழும் வசுதேவர் மகனென்று குதூகலித்து உலகம் கொண்டாட, அற்புதமான நாளொன்றில் அவதரித்தாய். "ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓரிரவில் ஒருத்தி மகனாய்ச் சென்று அங்கு ஒளித்து வளர, தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைத்த, கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில், நெருப்பென்ன நின்ற நெடுமாலே!" ஏதமிலா இடைச் சிறுரொடு நீ எளிமை தோன்ற இருந்தாய். கன்றினொடு பசுக்களைக் கனிவு கொண்டு மேய்த்தாய். ஒரு நாள் சிரித்துக் கொண்டே, யமுனைக் கரை நோக்கிச் சென்றாய்.

வேண்டவே வேண்டா. யமனுக்கு முன் பிறந்த யமுனை நதி அங்குளது; அதன் கரையில் ஒரு மடு உளது; அதில் பாழும் விஷத்தைக் கக்கிய பாம்புளது; கொதி கொதித்த நீர்; குளிக்கவும் முடியாது; குடித்தார் உயிரைக் குடித்துவிடும்; ஐந்தலைப் பாம்பான அக் காளிங்கனை, விளையாட்டாக நினைத்தாலும் நெஞ்சு வெந்துபோம். அங்குள மரங்கள் எல்லாம் காய்ந்து தீய்ந்து கரிந்து விட்டது; அணுகுவாரைப் பிணமாக்கும் அத் திசையில் செல்லவே அஞ்சுவம் யாம்! என்று, இடை வந்து மறியல் செய்தனர் இடைச் சிறுவர்.

அஞ்ச வேண்டா! ஆரம்பத்தில் எவரும் அகதிகள் தான். தவம் செய்வர். பேறு பெறுவர். அதன் பின் தாமே முதன்மையர் என்று தருக்குவர். தகுதியுடையோர், பாவமான இவர்களால் தடுமாறுவர். வீணர் இவர்களில் சேர்ந்தது இந்த விஷப் பாம்பு. தான்தோன்றியான அதை, யான் தண்டித்து விடுகிறேன் என்று, நாகமிருந்த மடுநோக்கி நடந்தாய்.

கரையில் இருந்த கடம்ப மரத்தில் கால் வைத்து ஏறினை. ஆயர் மாதரும் ஆடவரும் அஞ்ச, கோலாகலமான மடுவில் குதித்தாய்.

ஞானவேல் சத்திவேல் ஞாலத்தைக் காக்கும்வேல்
கானவேல் தன்னைஎன் கண்களிக்கக் காட்டாயோ

படபடத்து எழுந்தது பாம்பு. அதைப் பின் தொடர்ந்து ஓடிப் பிடித்தாய். வால் மடக்கி உடல் சுருட்டி, கொள்ளித் தேள் போல் குதித்த பாம்புடன், வித்தகா! நீ சிறிது நேரம் விளையாடினாய்! ஐயோ! ஐயோ என்று கரையில் இருந்தவர்கள் அலறினர்.

படம் ஐந்தையும் விரித்தது பாம்பு. அவைகளின் மேல் ஏறி, திருவடிச் சிலம்பொலிக்கத் தெய்வ நடம் கொண்டாய். 'லகர எழுத்தைப்போல் வளைந்த அவன் நல் லுடலம் நெளிய, அவன் தலைமேல், நின்று குதித்தெழுந்து நிருத்தமே செய்தாய். கொட்டம் அடங்கிய காளிங்கன், கண் பிதுங்கிக் குய்யோ முறையோ என்று குமுறினன்.

உடனே இரு புறத்தும் எழுந்த அவன் மனைவியர், கோவிந்தா! என்று உன்னைக் கைகூப்பிக் கும்பிட்டு, கண் மழை பொழிந்து கதறினர்.

மாதவ கேசவ வைகுந்தா! தயாமூல சாகரா! மாங் கல்ய பிட்சைதா என்று விழுந்து வணங்கி வீறிட்டார்.

நைந்து அழுத நாக மாதர் வேண்டல் நோக்கி, கனிந்து இரக்கம் காட்டினை.

இனி எவர்க்கும் இடையூறு செய்யாதே! இனிமேல் கடலே உனக்கு இருப்பிடம் என்று, கொட்டம் அடங்கிய காளிங்கனுக்குக் கட்டளையிட்டு அனுப்பினை.

அதன்பின் ஜகன் மோகன வேணுகானம் செய்து, அவனால் பட்ட மரமெல்லாம் தளிர்க்கப் பண்ணினை. பொய்கை நீரையும் புனிதம் ஆக்கினை.

'காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்(டு), அவன்
நீள்முடி ஐந்திலும் நின்று நடம் செய்து,
மீள அவனுக்(கு) அருள் செய்த வித்தகன்
தோள்வலி வீரமே பாடிப் பற!
தூமணி வண்ணனைப் பாடிப் பற !!'

என்று அன்று முதல் இன்று வரை, குதூகலமாக உன் புகழைப் பாடிக் கும்மி யடிக்கிறது குவலயம்.

ஊராரை நலிந்த காளியனை, இங்ஙனம் ஒழித்தனை. அகடித கடனு சாமர்த்திய உன்னை, அந்தோ! காதக கம்சன் ஒழிக்கக் கருதினன். இது என்ன வேதனை!

வில் விழா நிகழ்கிறது. அதற்கு வருவார்கள் அனை வரும். நீ என் அருமைத் தங்கை மகன் அல்லவா! கண்ணு! உன் தமயன் பலராமனுடன், வேள்வி விழா அதனில் நீயும் கலந்து கொள்ள வேண்டும் என்று கடிதம் அனுப்பினன் கம்சன்.

சூழ்ச்சி இது என்று பலர் சொல்லியும் கேளாமல், துறுதுறு என்று சென்ருய். இடை வழியில் ஒரு கூனி எதிர்ப்பட்டாள். பலராமனுக்கும் உனக்கும், அவள் புனித சந்தனத்தைத் திருமேனியிற் பூசினள்.

இராமாயண காலத்தில்,

'கொண்டை கொண்ட கோதை மீது
தேனுலாவு கூனிகூன்
உண்டை கொண்(டு) அரங்க ஓட்டி
உள்மகிழ்ந்த நாதன்' ஆன நீ,

இந்தக் கிருஷ்ணவதார காலத்தில் பணி செய்த (நைக வக்கிரை எனும்) அக்கூனியின் கால்களில் கால் வைத்து ஊன்றி, மோவாய்க் கட்டையைப் பிடித்து நிமிர்த்து, கோணல் நீக்கி அவளைச் சிறந்த கோதை யாக்கினை.

அதன்பின் கம்சன், பூரித்த ஆயுத சாலையுள் புகுந் தாய். மூடன் அவனுடைய வில்லை முறித்தாய். அசுர ஆவேசமுடன் எதிர்த்த குவலயா பீடத்தின் இரு தந்தங் களையும் பிடுங்கி, அவைகளைக் கொண்டே அந்த யானையை அடித்து அழித்தாய்.

சாணூரன் முஷ்டிகன் முதலிய மல்லர்களைச் சாய்த் தாய். அரியணை மீதிருந்த கம்சனுடைய குடுமியைப் பிடித் துத் தரையில் தள்ளி, அவனை மேல் வீழ்ந்து அழித்தாய்.

தாரகனைச் செற்றவேல் தாபதர்கள் போற்றும் வேல்
ஆரணவேல் பூசைஎன்றும் அடியேற்(கு) அருளுதியோ

துஷ்ட நிக்ரகம் சிஷ்ட பரிபாலனம் என்று செய்த உனது பயனுன இந்த ஆடல்களைப் பாடிப்பாடிப் பயனடைவோம். இப்படி மங்களா சாஸனம் செய்து கொண்டிருப்பதே எங்கள் மரபு என்று, பெரிதும் உவந்து பாடுகின்றார் பெரியாழ்வார். இதோ வருகிறது பாசுரம். பாடி உணர்ந்து பாருங்கள்! அப்போதுதான் தெரியும் அந்த அருமை!

எந்நாள் எம்பெருமான்! உன்தனக்(கு)
அடியோம் என்று எழுத்துப்பட்ட
அந்நாளே, அடியோங்கள் அடிக்குடில்
வீடு பெற்று உய்ந்ததுகாண்;
செந்நாள் தோற்றித், திருமதுரையுள்
சிலைகுனித்து, ஐந்தலைய
பைந்நாகத்தலை பாய்ந்தவனே! உன்னைப்
பல்லாண்டு கூறுதுமே.

(பொ-ரை.) எம்பெருமானே! அடியோங்கள் உனக்கு அடிமை எனும் சொல், எங்கள் வாயில் என்று பிறந்ததோ, அன்று முதல், அடியேமுடைய அடியார் பரம்பரை உயர்ந்த கதி பெற்று உய்ந்தது. அரிய ஒரு நாளன்று அவதரித்து, மனத்தை மகிழ்விக்கும் வட மதுரையில் (கம்சனது) வில்லை வளைத்து (முறித்து,) ஐந்து தலைகளுடைய படமெடுத்தாடும் காளிங்கப் பாம்பின் தலைமேல், (அகங்கார கண்டனம் செய்யக் குதூகலங் கொண்டு) குதித்தவனே! (பயனுன) உனக்குப் பல்லாண்டு பாடுவம், (எ - று).

விக்ரகத்தில் மட்டும் அல்ல; காணும் பொருள் அனைத்திலும் கண்ணன் உளன். இந்த எண்ணம் கொண்டவர் எந்த நேரத்தும் ஒருபடித்தாவர். வழிபாட்டு நேரத்தில் மட்டும் வாய்மையராகி, அடுத்த காலங்களில் அசுர உணர்வினர் ஆவது அறமன்று; பயனும் இல்லை. ஆஸ்திகரா யிருந்தே தெய்வ நிச்சயம் இல்லாத இவர்களை எப்பெய

வென்ற விசித்திரவேல் வெற்றிவேல் தனைத்தூண்டி
என்றும் எனையருள எம்பெருமை எண்ணுதியோ

ரிட்டு அழைப்பது? இவ்வுலகில் பெரும்பான்மையர் இவர்களே எனில், வைக்கோல் துறுத்த கன்று போன்ற இவர்களை நம்பி ஏமாந்து போகாதபடி, கடவுள் தான் உண்மைப் பக்தர்கட்குக் கை கொடுக்க வேண்டும். சமூகம், சமயம், மொழி, அரசியல் முதலிய பல கோஷங்களால் அல்லோல கல்லோலமாக உள இன்றைய உலகில், பெரிதும் வழி காட்டுவார் பெரியாழ்வார் போன்ற பெரியோர்களே என்று கூசாது நம் நா கூறுகின்றது.

வாழ்க பெரியாழ்வார் வழி.

மரணபயம் வேண்டாம்

(ஆனந்தன்)

உலகில் எல்லாவித பயங்களிலும் மரணபயமே மிகப் பெரியதும் அதிக கலக்கத்தை உண்டுபண்ணக் கூடியதுமாயிருக்கிறது. மற்றெல்லா பயங்களும் மரணபயத்துள் அடங்கும். மரண பயம் அற்றவன் உலகில் எதற்கும் அஞ்சான். 'சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் தண்ணீர்' என்பது முதுமொழி. ஆனல் மனிதர்கள் இறக்கும்போது அதிக கலக்கமடைந்தவர்களாய் முகம்மாறுபட்டு, பெரியதோர் துயரத்தினை யடைவதையே எங்கும் காண்கின்றோம்.

இவ்வாறு இவர்கள் துன்புறுவதற்குக் காரணம், இவர்கள் 'மரணம் யாதென்றும், மரணத்திற்குப்பின் என்ன ஆகும் என்றும், மரணத்தினை வெல்லுமாறு யாதென்றும்' விசாரித்தறியாமையே யாகும், கற்றறிந்த பேர்கள் மரணத்தைக் கண்டு அஞ்சுவதில்லை என்பது கீதையில் கண்ணன் கூற்று. 'ஆத்மா, போக்கு வரத்தற்றது, அழிவில்லாதது, அணுவியானது' என்றும், 'மனிதன் தன் பழைய ஆடைகளைக் களைந்தெறிந்துவிட்டு புதிய ஆடைகளை அணிந்து கொள்வதேபோல், ஆன்மாவும் தன்னுடைய பழையதோர் உடலைவிட்டுப் புதியதோர் உடலினில்புகும் என்றும் கீதையில் கூறப்பட்டுள்ளது. திருவள்ளுவ நாயனரும், நாம் தினமும் உறங்குவதுபோலும், உறங்கி விழித்தெழுதல் போலும்

இறத்தலும் மறுபடியும் பிறத்தலும் சாதாரணமான விஷயம் என்று கூறுகின்றார். அருணகிரியாரும், 'மரணப் பிரமாதம் நமக்கில்லை' என்கின்றார். இதனால் இறைவன் திருவடிப் பெருமையைக் கற்றறிந்த மேலோர் மரணத்தைக்கண்டு அஞ்சுவதில்லை என்று புலனாகிறது.

ஒரு சமயம் புத்தர்பிரான், கொலைக்கஞ்சாக் கள்ளனொருவன் குகைக்குள் சென்று அவனருகே நின்றபோது, அக்கள்ளன் அவரைத் திரும்பிப் பார்த்து, 'என் குகைக்குள் வேறு ஒரு மனிதனா? என்று ஆச்சரியப்பட்டவனாய், 'ஏ மனிதனே? நீ என் தனிமையான குகைக்குள் வந்திருக்கின்றாயே. நீ உன் உயிருக்குப் பயப்படவில்லையா' என்று கேட்டான். அது கேட்ட புத்தர், புன் முறுவல் பூத்தார். 'மகனே! நான் என் உயிருக்குப் பயப்பட வில்லை. அதற்குக் காரணங்கள் மூன்று. முதலாவதாக, மரணம் எப்பொழுதாவது ஒரு சமயம் வந்தே தீருமாதலால் அதனை நான் எப்பொழுதும் வரவேற்கிறேன். அதனைக்கண்டு அஞ்சுவதால் நாம் மரணத்தை தவிர்க்க முடியாது. இரண்டாவதாக, நீ என்னைக் கொல்வதனால், உனக்கு யாதொரு பிரயோஜனமும் இல்லை. அதனால், நீ என்னைக் கொல்ல மாட்டாய். மூன்றாவதாக, மரணமடையக் காலம் வருவதற்குமுன், நீ இவ்வுயிரை என்னுடலினின்றும் பிரிக்க முயற்சி செய்வாயாயின் அது உன்னால் முடியாத காரியமாகும்' என்று கூறினார். அதுகேட்ட கள்ளன் உள்ளத் தெளிவுற்று, அவரது திருவடிகளில் விழுந்து, அவருக்குச் சீடனாய் நலம் பெற்றுய்ந்தானாம்.

பிரகலாதனைக் கண்டு 'நீ சொன்ன அரியை எனக்குக் காட்டவில்லையானால், நான் உன்னைக் கொன்றுபோடுவேன்'என்று கூறிய இரணியனைக் கண்டு நகைத்து, 'என்னுயிர் நின்னால் கோறற் குரிய தொன்றன்று' என்று கூறி, இவ்வுயிர் எனக்கு இறைவனால் கொடுக்கப்பட்டது. ஆதலால் அவனாலன்றி வேறொருவராலும் இது உடலினின்றும் பிரிக்கப்பட மாட்டாது' என்று திடங்கொள்ளுகின்றான் பிரகலாதன்.

இவற்றால், இறைவனது கட்டளையின்றி நமதுஉயிர் உடலினின்றும் பிரிவதில்லை என்பது அறியப்படுகிறது.

இவ்வுயிர் நமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட தொன்றாயின், அது அவனுடைய கட்டளையாலன்றி இவ்வுடலினின்றும் பிரிக்கப் படுவதில்லை. மரணத்தினை வெல்லலுங்கூடுமோ வெனின்,

---

சத்திபல வற்றிற்கும் தாயான மெய்ஞ்ஞான
சத்திவேல் என்றன் உட்பகையைச் சாய்க்காதோ

அது அவனது திருவருளாலேயே கூடும் என்று மேலோர் வாக்குக்களாலும், ஆன்ம ஞானியர்களின் அனுபவங்களாலும் அறியப்படுகின்றது.

முதலாவதாக, 'விதிகாணும் உடம்பை விடா வினையேன்' என்ற அருணகிரியாரின் கூற்றின் பொருள் கண்டு, 'நானிந்தத் தேகம்' என்னும் தேகாபிமானத்தை விட்டு, 'நானிந்தத் தேகம் அல்லன், நான் ஆத்மசொரூபம், அறிவுருவானவன், அறிவற்றவன், அனாதியானவன், நான் ஒரு காலத்திலிருந்து ஒரு காலத்தில் இல்லாதிருப்பவனல்லன் என்ற திடங்கொள்ளல் வேண்டும்.

இந்தத் தேகம் அழியினும் நான் அழிபவனல்லன்.

இவ்வாறு தேகம் நான் என்கின்ற தேகாபிமானத்தை விட்ட ஆத்மஞானி, இந்தச் சரீரத்தோடிருப்பினும் சரீரத்தை விட்டவனாகவே வாழ்கின்றானாதலினாலும், ஜீவத்தன்மையை உணர்கின்றானல்லது ஜடத்தன்மையை உணர்வதில்லை யாதலினாலும், தானென்றும் தன்னதென்றும் பற்றற்று வாழ்தலினாலும், எல்லா உயிர்களும் தன்னுயிராக எண்ணி வாழ்வதினாலும், தன்னுடலழியினும் தானழியாத ஆத்மநிலையில்தான் மற்றெல்லா வுயிர்களிலும் கலந்துறையும் இறைத்தன்மையை யடைந்தவனாய், இறைவனும் தானுமாய் இறைவனோ டிரண்டறக் கலத்தல் என்னும் சாயுச்சிய நிலையை அடைந்து ஏகபோக வாழ்வினை யெய்துகிறான். இந்த ஆத்மஞானிக்கு இறப்பதற்கு முன்னும் இந்த நிலையே. இறந்த பிறகும் இந்த நிலையே. மரணத்தால் ஆத்மஞானியின் நிலை மாறுபடுவதில்லையாதலின் மரணத்திற்கு இடமில்லை யாகின்றது.

மேற் கூறியவற்றால் ஆன்ம ஞானியிலும் ஜீவன்முத்தர்க்கே மரணத்தை வெல்லல் முடியும் ஏனையோர்க்கு எளிதன்று எனத் தெரிகின்றது.

ஆன்ம ஞானத்தை யடைந்த காலத்திலேயே மரணபயம் அற்றுப் போகின்றது. இவ்வான்ம ஞானத்தை யடைந்த பிறகும் இவ்வுடலில் பற்றற்று வாழ்பவர்கள் ஜீவன் முத்தர்கள் ஆவார்கள். இவ்வாறு வாழ்பவர்கள் ஒரு சிலரே யாவார்கள். ஒரு கோடிக்கொருவர் கூடக் கிடைப்பதரிது. இப்படிப்பட்டவர்களை தனிப்பிறப்பு அல்லது இறைவன் அவதாரம் என்று சொல்லல் வேண்டும். இத்தகையோர்க்கு மரணபயம் என்பதோ, அதை வெல்லல் வேண்டுமென்பதோ கிடையாது. ஆனால் இத்தகைய பெருந்தன்மையோர், தேகமுள்ளபோதே 'தேகம் நானல்லன்' என்று தேகாபிமானமற்று, வாழவறியாத ஏனையமக்களுக்கும்

உள்ளத்தில் தோன்றும்வேல் உக்கிரவேல் என்முன்
துள்ளிவந் தாற்றத் துணைபுரிவ தென்னாளோ

மரணத்தினைவெல்லும் மார்க்கம் ஒன்றினை வகுத்துள்ளனர். அதுவே, அப்பெரியோர்களின் பாடல்களைக் கொண்டு, இறைவன் புகழினைப்பாடி, 'எனக்கு மரணம் ஒருகாலத்தில்வரும். அப்போது என்னைத் தேவரீர் ரக்ஷித்தல் வேண்டும் என்று இறைவனை இடைவிடாது வேண்டிக் கொள்ளலாகும். அருணகிரிநாதர் 'கார் மாமிசை காலன்வரிற் கலபத் தேர்மா மிசைவந் தெதிரப்படுவாய்' என்றும், அப்பர், கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம், ஏற்றுக்கோ நமனல் முனிவுண்பதே' என்றும், 'இறைவன்திருவடிப் புகழினைப் பாடுங்கள் மரணபயமற்று வாழுங்கள் என்றும் வழி வகுத்துள்ளனர். இப்பெரியோர்கள் தங்களுக்காக இப்பாடல்களைப் பாடி, மரணம் வரும்போது தங்களை இறைவன் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டிக் கொண்டவர்களல்லர். இவர்கள் இறைவனை நேரில் கண்டவர்கள். ஆத்மஞானியர்கள், எமபயமற்றவர்கள். இவர்கள், 'இந்தத் தேகம் உள்ளபோதே இறைஞானம் பெற்றுத் தெளிவு பெறாத நீங்கள், இந்த பாடல்களைப் பாடுங்கள். இறைவனை எப்பொழுதும் வேண்டிக் கொள்ளுங்கள். மரணம் வரும்போது உங்களுக்கு உதவுவது அவன் திருநாமமேயன்றி, உலகில் உள்ள மற்றப் பொருள்களல்ல என்றே இப்பாடல்களை உலகுக்குத் தந்துள்ளனர்.

'பஜகோவிந்தம்' பாடிய சங்கரர் முதற்கண் கூறும் காலையிலேயே, 'கோவிந்தனைப் பஜனைசெய், கோவிந்தனைப் பஜனைசெய், கோவிந்தனைப் பஜனைசெய் என்று மும்முறையும் கூறி, 'மரணம் உன்னை வந்தடையும்போது உன்னை ரக்ஷிப்பது இறைவன் திருநாமம் ஒன்றே அன்றி, இங்கு நீ கற்கும் வியாகரணம் முதலிய கற்பனைகள் அல்ல' என்று கூறுகின்றார். மற்றும் 'பகவத்கிதையில் ஒருசிறிதறிந்தவன், கங்காஜலம் ஒரு துளி பருகியவன், இறைவனை ஒருமுறை வணங்கினவன் எவனோ அவனுக்கு எமபயமில்லை' யென்றும் கூறுகின்றார். இதனையே அருணகிரியாரும், தினைப்போதளவும், ஓங்காரத்துள் ளொளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு தூங்கார் தொழும்பு செய்யார் எமதூதருக்கே?' என்செய்வார். எமன்சண்டைக்கஞ்சார்—(கந்தர்) அலங்கார நூற்றுள் ஒருகவிதான் கற்றறிந்தவரே' என்று முடிக்கின்றார். ஆதலின், (உலகில் எத்தனைத் துன்பங்களுக்கிடையேயும் ஆசாபாசங்களுக்கிடையேயும் உழல்பவர்களும்கூட) இறைவனது திருவடிகளைப்பற்றி, இறைவனது திருநாமங்களை இடைவிடாது செபித்து, அவன் புகழினை அநவரதமும் பாடி, இறைப்பணியில்

ஈடுபட்டிருந்தால், பட்டிக்கடாவின் வருமந்தகா, உன்னை வெட்டிப் புறங் கண்டலது விடேன். முருகனருள் பெற்றேன் என்று கூறி, மரணபய மற்றிருக்கலாம் என்பது தெளிவாகின்றது. இதனையே கீழ்க்காணும் ஞானசம்பந்தர் பாடலும் விளக்குகின்றது.

தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும்
போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால் ஏழைநெஞ்சே
அந்தண் ஆரூர் தொழுது உய்யலாம் மையல்கொண்டு
அஞ்சல் நெஞ்சே.

குலச்சிறை நாயனார்

(கி. வா. ஜகந்நாதன்)

அரசருக்கு எத்தனை ஆற்றல் இருந்தாலும் அவருக்குத் துணையாக நல்ல அமைச்சர்கள் இருந்தால்தான் அரசாட்சி நன்கு நடைபெறும். சில சமயங்களில் அரசன் தக்கபடி நடவாவிட்டால் அவனைத் திருத்தி நல் வழியில் செலுத்த வல்லவர்களாக அமைச்சர்கள் இருக்கவேண்டும். "அரசனே இப்படி இருக்கும்போது நமக்கு என்ன கவலை?" என்று பராமுகமாக இருந்தாலும், "அரசனை எப்படித் தடுப்பது" என்று அஞ்சினாலும், "அரசனுக்கு ஏற்ற படி இச்சகம் பேசினாலும் நாடு சீர்குலைந்துவிடும். அத்தகைய அமைச்சர்களை எண்ணியே, "ஊரைக் கொளுத்துகிற அரசனுக்கு ஊதிக் கொடுக்கிறவன் மந்திரி" என்ற பழமொழி உண்டாயிற்று.

பாண்டியன் நெடுமாறன் வழிவழி வந்த பாண்டிய மரபில் உதித்தாலும், அம்மரபுக்குரிய சைவ நெறியினின்றும் மாறி சைனனானான். சமய உணர்வு மிகுதியினால் இது

தீயாரை நல்லாராச் செய்கின்ற தெய்வவேல்
ஆயாசம் தீர்க்க அடியேன்முன் வாராதோ

சிறந்தது என்று கருதி மாறவில்லை. சைனருடைய ஆசாரத்திலும் பழக்கத்திலும் அவன் அறிவு திறம்பியது. அவன் சைன சமயத்தினனுகவே சைன குருமார்கள் அவனைத் தம் வசப்படுத்தி அரசியலிலும் குறுக்கிடத் தொடங்கினர்.

அப்போது அமைச்சர் தலைவராக இருந்தவர் குலச்சிறையார். அவர் பாண்டிய நாட்டில் உள்ள மணமேற்குடி என்ற ஊரில் பிறந்தவர். சிவபெருமானை அல்லும் பகலும் நினைந்து அன்பு செய்கிறவர். சிவனடியார்களைத் தெய்வம் என்று மதிப்பவர். எந்தச் சாதியினராலும் எந்த நிலையினராலும் திருநீறும் கண்டிகையும் புனைந்தவர்களானல் எதிர்கொண்டு வரவேற்று அவர் காலில் விழுந்து பணிந்து உபசரித்து விருந்து அளித்து அனுப்புவார். தம் இல்லக் கிழத்தியாரும் தம் அறத்துக்குத் துணை நிற்க, இந்தத் தொண்டர் வழிபாட்டைச் சிறப்பாகச் செய்து வந்தார். அடியார் தனியே வந்தாலும் கூட்டமாக வந்தாலும் சிறிதும் தங்கு தடையின்றி உணவு அருத்தி உவகையடைந்தார்.

அவருக்கும் பெரு நம்பி என்ற பட்டம் உண்டு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெருநம்பி குலச்சிறையார் என்று அவரைக் குறிக்கிறர். பழங்காலத்தில் சிறந்த அமைச்சர்களுக்குப் பெரு நம்பி என்ற பட்டம் சோழர்களாலும் பாண்டியர்களாலும் அளிக்கப் பெறுவது வழக்கம். ஒட்டக்கூத்தர் தாம் இயற்றிய தக்க யாகப் பரணியில் குலச்சிறையார் பெரு நம்பி என்னும் பட்டம் உடையவர் என்பதைக் குறித்திருக்கிறர்.

அரசன் சைன நெறியில் புகுந்ததோடன்றி சைனர் சார்பில் ஒழுகிச் சைவர்களைப் புறக்கணிப்பதைக் குலச்சிறையார் அறிந்து மிக வருந்தினர். பாண்டியன் மனைவியாராகிய மங்கையர்க்கரசியார் சிவ பக்தியிற் சிறந்தவர்.

கவலையகற்றிக் களிப்பருளும் கண்ணருள் வேல்
கவசவேல் கண்டடியேன் காதல்கொளத் தூண்டுதியோ

அவர் தம் கணவருடைய மாற்றம் கண்டு வருந்தி இறைவனிடம் அவர் திருந்தவேண்டுமென்று மனமுருகி வேண்டினர்.

அக்காலத்தில் ஒரே குடும்பத்தில் வெவ்வேறு சமயத்தைச் சார்ந்தவர்கள் இருப்பதும் உண்டென்று தெரிய வருகிறது. குலச்சிறையார் மங்கையர்க்கரசியாருடைய பக்தி நிலை தெரிந்து அவரைத் தெய்வமாகப் போற்றி வந்தார். திருஞான சம்பந்தப் பெருமான் மதுரைக்கு எழுந்தருளினல் சைனர்களுடைய ஆரவாரம் அடங்குமென்று அரசியார் நினைத்தார். அவர் விருப்பம் நிறைவேறுவதற்கு உறுதுணையாக நின்ருர் குலச்சிறையார். சம்பந்தப் பெருமானை வருவித்து வேண்டிய வழிபாடு ஆற்றிச், சைனர்கள் வாதத்தில் தோல்வியுற, அவர்களுக்குரிய தண்டனையைப் பெறும்படி செய்தார் இந்நல்லமைச்சர்.

அரசன் பழையபடி சைவனுகி மரபுக்கு ஏற்ற செயல்களில் ஈடுபடும்படி செய்த பெருமையில் குலச்சிறையாருக்கு ஒரு பங்கு உண்டு.

சிவநேசச் செல்வர்கள் 11

மகத்தில் வந்த மகவு
(ரசபதி)

இன்ப நிலம்

ஆனைமலை, ஈமலை, பசுமலை, பாம்புமலை, கருடமலை முதலிய பல மலைகளைத் தமிழ் நாட்டில் பார்க்கிருேம். இனிய அருள் நூற்கள், இவைகள் காரணப் பெயரென்று விரிவாக எடுத்து விளக்கி யிருக்கின்றன. அரிய இம்மலைகளை, எவரும் அணுகலாம்; அணுக முடியாத மலை அண்ணுமலை.

நிச்சலமாம் சித்தமொடு நின்னடியைச் சிந்திக்கும்
இச்சை நிறைவுறுவ(து) என்ருே இறையோனே

கச்சியில், மண்ணின் நட்பத்தைக் காணலாம். ஆனைக் காவில், நீரின் நுண்மையை அறியலாம். தீயின் தெளிவைத் திருவண்ணு மலையில் தேரலாம். காற்றின் உள்புலனைக் காளத்தியில்தான் காணமுடியும். விண்ணின் உயிர்ப்பு, தில்லையில் விளங்கும். இந்த ஐந்தின் நடுவதான அண்ணு மலை, தூயவர் உள்ளத்தைத் தொடுகிறது.

விராட் புருடனுக்கு, காசித் தலமே புருவ நடுவிடம். வாழ்விக்கும் அப்பதியில் வழிபடுவார்க்கு, செவியிற் சாரும் தாரக நாதம். அதன் பயனுக, அடுத்து வரும் பிறப்பு அவர்கட்கு இல்லை. முதன்மைத் திருவாரூர் மூலா தாரத்தலம். அமைதி பிறக்க அங்கு ஆராதிப்பார்க்கு, காணும் பொருள் எல்லாம் சிவமாகவே காட்சியாகும்; அதன்பின், வாழ்விக்கும் பிறப்பு திருவாரூரில் வாய்க்கும். அங்கு முன்னைய வாசனை முறுகி யெழும். முதன்மை முத்தி முன் நிற்கும். சிறந்த உள்ளமே பிண்ட சிதம்பரம். தகராலயமான அச்சிதம்பரத்தைத்தரிசித்தவர்க்கு, அண்ட சிதம்பர அற்புதம் தெரியும். இந்நிலையில் தில்லையை அறிந் தவர், பிறவிக்கென்று திரும்புவது இல்லை.

நினைவு திருவண்ணுமலையில் நிலைத்தவர்க்கு, இன்ப முத்தி இனிது சித்திக்கும். இவைகள் அனுபவிகளின் அமுத மொழிகள். ஓஹோ! அப்படியா! அப்பதியிலேயே வசிப் பவன் நான் என்று பல்லிளித்துப் பல்லவி பாடிப் பய னில்லை. இடையருமல் எண்ணுவார்க்கு அண்மும் அம் மலை, அண்ணுதார்க்கு அண்ணுமலை ஆய்விடுகிறது.

ஆட்சிப் பேறு

ஞானக்கனல் வண்ணமான அண்ணுமலையில், வேதியர் வேதம் ஓதுகின்றனர். நலமொடு வேள்விகள் நடைபெறு கின்றன. அந்தணர் ஒற்றைக்கோல் ஏந்தினர். முக்கோல் ஏந்திய முனிவரும் உளர். தராசுக் கோலில் தர்மம் உயிர்த்

சாதகநின் கஞ்சமலர்த் தாளே சரணங்காண்
ஆதங்கம் நீக்கிமதி ஆளஎன்முன் வாராயோ

னர். என்ன செய்தும் மகப்பேறு எய்தவில்லை. எழுதாக் குறைக்கு அழுதால் ஆவது என்?

ஒரு நாள் அரியணையில் இருக்கின்றார் அரசர். அண்மையில் அமைச்சர்கள் அமர்ந்துளர். வனப்புடைய அரசர் முகம் வாடி யிருக்கின்றது. எதை எதையோ குறித்த மந்திராலோசனையின் இறுதியில், வல்லாள மன்னர் வாய் திறந்தார்.

எதிர் காலத்தில், இந் நாட்டை வாழ்விக்கும் மைந்தர்ப் பேறு வாய்த்திலது. பெருமான் வழிபாட்டில் பிழை செய்தேனோ? செங்கோல் முறையில் சிதைவு பிறந்ததோ? என்னவோ என்று பெருமூச்செறிந்தார் அரசர்.

காவலர் வருத்தம் கண்டு கலங்கிய அமைச்சர்கள், தம் கலக்கத்தை வெளிக்குக் காட்டிலர்.

அரசே! முக்கண் கொண்ட முதல்வன், அரிய நம் இதய தாபத்தை அறிவன். மகப்பேறு வாய்க்கும் எனும் சங்கற்பத்துடன், உள்ளம் குளிர எவர்க்கும் உதவுவம், அறத்தின் பயனும் அமலன் அருளும் துணைபுரிய, சத்புத்திரப் பேறு நேரும் என்று உணர்கிறது எம் உள்ளம் எனும் ஆறுதல் மொழிகள் ஆயிரம் பகர்ந்தனர். காவலர் சபை அதனுடன் கலந்தது.

செம்மையறம்

வந்தவர் எது கேட்டாலும் மன்னர் வழங்குவார் என்ற பறையொலி எங்கும் படர்ந்தது. அன்ன தானத்தை அறிவிக்கக் கோட்டையில் பறக்கின்றது கொடி.

திருமணமெனில் ஆயிரம் பொன். ஆபரணம் அடகு; வீடு வாசல் கொதுவை யெனில் இரண்டாயிரம்; முந்நூல் சடங்கெனில் முந்நூறு பொன். இறைவன் கோயில் பணியெனில், இருபதினாயிரம். சத்திரம் சாவடி, கிணறு குளம் சாலையெனில், ஐம்பதினாயிரம் பொன் என்பது திட்டம். இது மன்னருடைய கொடை நடை. வந்த விருந்தினர்

வறுமையும் வன்பிணியும் வாதுபல சூதுநிறை
சிறுமை யுலகிலெனைச் சேரவைத்தல் செம்மையதோ

வந்தபடியே யிருந்தனர். அரசர் மனநிலை அறிந்த குடிகள், தாமும் தம்மால் இயன்ற அளவு தானம் செய்யலாயினர்.

புனித வருகை

விண்ணளாவிய புண்ணியம், விமல ஒளியாய் எங்கும் வியாபித்தது. வான வீதியில் சென்ற ஞான நாரதர், ஊடுருவிய ஒளியை உணர்ந்தார். கரிய இருள் பரப்பும் கலியில், ஒளியின் விளைவு கண்டு உருகியது உள்ளம். விளைவித்தவன் மன்னன் என்பதை உள்ளக் கண்கொண்டு உணர்ந்தார். மேல் நோக்கிச் சென்ற அவர், வேந்தனைக் காண விரும்பிக் கீழ் நோக்கினர்.

வருக வருக! என்று தர்ம தேவதை வரவேற்பது போல் ஒரு தோற்றம். உடனே இனிது மகிழ்ந்து இறங்கினர். பூஞ்சோலையில் தனித்திருந்த பூபதியைக் கண்டார்.

வந்தவர் நாரதர் என மன்னர் உணர்ந்தார். விரைந்து எழுந்து வீழ்ந்து வணங்கினர்,

ஸ்வாமி! அயன் தவத்தில் அவதரித்தீர்! இனிய மகதி யாழை ஏந்தினீர்! மான் ஏந்திய கையார்; மதி தாங்கிய முடியார்; மங்கை பாகர் கூத்திற்கு இசைய இசை யெழுப்பும் பெருந்தகையே! என்பால் எழுந்தருள முன் பிறப்பில் எத் தவத்தைச் செய்தேனோ இவ் ஏழை?

ஆனந்தக் கண் மழை பொழிய, பரிவொடு கூறிய பார்த்திபர் மொழிகளைக் கேட்ட நாரதர் உள்ளம் நெகிழ்ந்தது.

தற்போதம் கெட்டவர் தபோதனர். அவரினும் சிறந்தோர் மௌன ஞானிகள். அவர்கள் வாழ்த்தும் முதன்மைக் குலம் மூன்று. அம் மூன்றுள், அக்கினி குலத்து உதித்த அரசே! நீ வளர்த்த இன்ப அறவொளி யீர்த்தது. வாழும் உன்னிடம் வந்தேன். என்ன சொல்ல வேண்டுமோ நீயே சொல்!

சொல்வதா! என்ன சொல்கிறார் இந்த நாரதர்? எங்கெங்கேயோ சுற்றி வளைத்து, மேலும் பேச முடியாமல் குழறுபடியா யுளது நாரதர் நிலை. புண்ணியம் மிக்கவரை அணுகும் போது, எவர் நிலையும் இப்படித்தான் ஆகுமா என்ன?

ஸ்வாமி! எதிர்காலத்தில் இந்நாட்டைக் காக்க சந்ததியில்லை. அதனால், பெரிதும் ஏக்கம் பெருகியது. கண்ணுதல் அடியார் உள்ளம் குளிர்விக்கும் கைங்கர்யத்தில் இறங்கினேன். இறைவன் திருவுளம் எப்படி யுளதோ! இதுதான் எனது இன்றைய நிலை. வேறு என்ன சொல்ல இருக்கிறது?

மன்னு! மாபெரும் அறத்தைச் செய்தவர்க்கு மகப்பேறு திண்ணம். அறநூல்களின் அறிவிப்பு இது!

குருபரன் அருளால் குழவியும் உண்டாம்;
கொற்றவா! செலவிடை தருவாய்!

என்ற நாரதர், அதன் மேலும் அங்குத் தடைப்பட்டிலர்; விறு விறு என்று போகிறுர்; அதோ பாருங்கள், அவர் போகும் வேகத்தை!

பிரதிநிதியின் பேருரை

ஓம் ஓம் என்று ஒலிக்கிறது தெய்வமணி. பல்லாயிர கணத்தவர் பஜனை செய்கிறுர்கள். அதோ மகதியாழ் இசை. ஆஹா! கயிலாயத்திற்கே வந்திருக்கிறுர் நாரதர். அவரைக் கண்டு, புன்முறுவல் செய்கிறது புனித சிவம்.

பிரபோ! வாழ்விக்கும் நீதியை வளர்க்கின்ற வல்லாளன், கனிந்த உண்மையைக் கண்டவன். அதனால், இடையறுமல் அறத்தில் ஈடுபாடு கொண்டுளன். தூய உமது அடிமலரைத் தொழுது வாழ்பவன். பிள்ளைப் பேறு இல்லையென்று அவன் பேதுறலாமா?

பதில் உரைத்திலன் பரமன்; கயிலையில் நடந்த கதையிது!

நாதபோதை

அண்ணுமலையில் இன்று ஆயிரக் கணக்கான அடியார்கள். என்ன விசேடம்? தெரியவில்லையே! தகுதியுடைய அவர்கள் நடுவில், ஒரு தலைவர். ஏதோ பாட்டு அல்லவா பாடுகிறுர்கள்! அதைச் சிறிது காது கொடுத்துக் கேட்போம்!

கணவனே கண் கண்ட தெய்வம் என்று எண்ணும் தாய்மையர் அண்ணுமலையில் இல்லையோ ஓ ஓ ஓ?

அறிவின் அழகுறு ஆண்மை ஆடவர் இல்லையோ ஓ ஓ ஓ?

அரும்பசி தணிய அன்னம் இடுவார் இல்லையோ ஓ ஓ ஓ?

கூப்பிய கைகளால் கும்பிட்டு, கனிவுடன் அமுதூட்டும் கண்ணியர் இல்லையோ ஓ ஓ ஓ?

தலைவர் முதலில் இப்படி அடி எடுத்துத்தர, ஆயிரக்கணக்கான அடியார்கள், தொடர்ந்து அவ் அடியைத் தொனியெழக் கூவினல், எப்படியிருக்கும் அவ்வொலி வெள்ளம்?

இவ்வோசை கேட்ட அண்ணுமலை மக்கள் எவரும், ஏன் அப்படியே தம்பித்து நிற்கிருர்கள்?

மேலும் மேலும் அடியார் கோஷம் கேட்கிறது!

பொன் அளித்தாலும் வேண்டாம் ம் ம்! பொன் பூஷணம் தரினும் யாம் விரும்போம் ம் ம் ம்! கனிவுதரும் முத்துமாலையையும் கருதோம் ம் ம் ம்! இன்பச் செங்கோலை அளித்தாலும் ஏற்கோம் ம் ம்! அன்னம் அளித்து ஆதரவு காட்டினல், அன்புடன் உண்ணுவோம் ம் ம் ம்!

பேஷ்! மக்கள் எவரும் இருந்த இடம் விட்டுப் பெயரவில்லையே! என்ன இது?

இல்லையோ! வேண்டோம்! விரும்போம்! கருதோம்! ஏற்கோம்! உண்போம் என எழுந்த ஓங்கார ஒலி, செவியிற் புகுந்து இதயம் பாய்ந்து என்னென்னவோ செய்துவிட்டது. சுத்த அநாதத்தில் மக்கள் சொக்கிப் போயுளர். அதனல்தான் மெய்ம்மறந்து நிற்கின்ருர். அதுதான் அவர்களைப் பார்க்கிற போதே தெரிகிறதே! எவரும் தம்மைத் தொடாரதபடி, தடைப்படுத்த வேண்டும் என்பது இவர்கள் நோக்கமா என்ன? இரவு மணி ஒன்பது ஆயிற்று. இன்னும் எங்கேயோ போய்க்கொண்டே யிருக்கிருர்களே!

அமைதி சூழ்நிலை

பயனுன சாதனையில் பழுத்தவர்கள் வேறு. முதன்மைச் சாதனையில் முயல்பவர்க்கு, முன்னைய வாசனை இடைவந்து மோதுவது இயற்கை. சால்பிழந்த அந்நிலையில் சித்தம்

சபலிக்க, மங்கையர் உறவில் அவர்கட்கு மனம் செல்லும். எண்ணம் நிறைவேறுதேல், அந்த ஏக்கமே மிகுந்து இடரடைவர். அதனால், அதுவரை வளர்த்த அவர் தவம் அவமாய்விடும். உலகம் புரக்கும் மன்னர்கள் இதையும் உணர்ந்துளர்.

சிவனடியாரைச் சிவமாகப் பாவிக்கும் செல்வியர் சிலருளர். உயர்ந்த இவர்களே உருத்திர கணிகையர். சபலிக்கும் சாதகர்க்கு, அருமையுடைய இவர்களே அரண். அங்ஙனம் தம்மை அணுகினரை, ஆடல் பாடல்களால் மகிழ்விப்பர்; அதன் மூலம், அடியவரைத் தெளிவித்து அனுப்பிவிடுவது அவர் தொழில். தெய்வ நிலை, உயிர் நிலை, உலகியல் மூன்றும், இவர்தம் பாடல் ஆடல்களில் உள்ள பாடம். கண்டும் கேட்டும், கலக்கம் அகல்வர் யோகிகள்.

போலிகள் அடியார் போர்வையில் வருவரேல், அதற்கு என்செய்வது? அதனால், அணுகுவார் இவர்கட்கு ஆயிரம் பொன் அளிக்க வேண்டும் என்பது அரச சட்டம்.

கற்புக் கணிகையர்

ஓ! அந்த உருத்ர கணிகையர் வீதிக்கே வந்துவிட்டார்களே அந்த அடியார்கள்! அதோ பாடுகின்றார்கள் இங்கேயும் பாருங்கள்!

கெண்டை போலும் விழியுடையீர்! கிளிபோல் கொஞ்சும் மொழியுடையீர்! நிறைமதி போலும் முகமுடையீர்! பூச்செண்டு சூடிய பூவையர்காள்! இன்றைய இரவு முழுதும் எம்முடன் இருக்க வேண்டும். எவ்வளவு பொன்னை அதற்கு எதிர்பார்க்கிறீர்கள்?

மானம் மரியாதை தெரியவில்லையே! நடுவீதிகளில் இப்படிப் பெருங் குரலிட்டுப் பாடும் இவர்கள் பித்தர். கோஷ்டியா என்ன?

இவ்வோசை கேட்டதும், உருத்ர கணிகையர் ஒவ்வொருவரும், தம் தம் வீட்டுள் இருந்து வெளிப்பட்டனர். திரண்ட அடியார் கூட்டத்தைக் கண்டு திகைத்தனர். இவ்வளவு பேரா? இவர்கள் எங்கிருந்து இப்படி வந்தனர்? இது அவர்கட்குப் புது அநுபவமாக அல்லவா இருக்கிறது!

அவர்களுள் முதன்மைத் தலைவி முன் வந்தாள். வந்த அடியவர்களை வணங்கினள். அவர்களுள், தலைவரை ஏறிட்டு நோக்கினள். உள்ளம் அவரை ஒருவாறு உணர்கிறதோ என்னவோ? பேசுகிறாள் பாருங்கள்!

பையரவு அணிந்த பரமனைப் போன்ற பகரரும் ஐய, கேள்! யாங்கள் பொய்யதும் உரையோம்; வஞ்சகம் உணரோம்! ஆயிரம் பொன் பெறுவது எம் வழக்கம். அளித்தால், மெய்யுடன் மெய்யும் பொருந்திட வினை தவிர்ப்போம் என்கிறாள்.

எவ்வளவு விநயம்! ஆண்டவனுக்கே ஆளானோம்! அடியவரை அண்ணுமலையா னுகவே எண்ணுவம். பரமனைப் போல சொல்ல முடியாத சொருபத்தர் உங்கட்கு, இச்சை யென்பதே இருக்க முடியாது. பொய்யது உம் உரை, ஓம். வஞ்சகம் உணர், ஓம். திரிகரணத்தாலும் மெய்யர் யாம்; மெய்ப்பொருளான உங்கள் தொடர்பால் வினையகல்வோம்; உமது கபட நாடகம் கலைய, இப்படித் துணிந்து கூறும் எம்மை மன்னியும் என்பாள்போல் ஒலிக்கிறது, அவள் மொழி யிறுதியில் உள்ள ஓம். ஓம்.

தலைவர் கட்டளைப்படி தனத ஸ்வாமிகள் முன் வந்தார். ஆயிரம் பொன்னை எண்ணி எண்ணி, ஒவ்வொருத்திக்கும் அளித்தார்.

அம்மா! உன் பெயர் என்ன? சிவகாமிங்க!

சரி. ஐய கனகசபை ஸ்வாமி! நீர் இவளொடு போம்!

அம்மா! உன் பெயர்? ஞானப் பூங்கோதைங்க!

சரி. காளத்தி ஸ்வாமி! நீர் இவளொடு போகலாம்.

உன் பெயர் யாது அம்மா? கற்பகவல்லி!

கபாலீஸ்வரரே! இவளொடு நீர் இருக்கலாம்.

இப்படியே பெயர்ப் பொருத்தம் கேட்ட தலைவர், அடியர். கரத்தில் அவர்களைச் சேர்த்தார். ஆயிரக் கணக்கான கணிகையர்க்கு, ஆயிரக்கணக்கான அடியவர். ஊரில் ஒரு கணிகையும் தனித்திராதபடி செய்தபின், அங்கிருந்து தலைவர் அகன்றார். இரவு மணி பத்து.

வேண்டல் நிலை

அரண்மனையில் இருக்கிறார் அரசர். என்ன இது? இதோ வருகிறாரே சங்கமர் தலைவர்!

காவலர் வல்லாளர் மனம் களித்தது. ஓடி வந்து எதிர் கொண்டார்.

ஸ்வாமி! தங்களை இன்றிரவு தரிசிக்க என்ன தவம் செய்தேனோ என்று, வந்தவர் அடி வணங்கி, இன்பம் துளும்பக் கண்ணீர் சிந்தினர் காவலர்.

மன்னா! நீதியை வளர்க்கும் உன்னரசு நீடூழி வாழ்க. இன்று ஒரு விகாரம் இதயத்து எழுந்தது. ஒரு கன்னியை உதவினால், உனக்குக் கோடிபுண்ணியம். இன்ப அமைதியை யடையும் என் மனம்!

என்ன இந்த சங்கமர் போக்கு இப்படியே போகிறதே? அரசரோ, அதை மறுக்கவும் இல்லை; வெறுக்கவும் இல்லை. சித்தம் அவ்வளவு தூரம் கெட்டுக் கிடக்கிறது. இவர் நினைவை நிறைவேற்ற வேண்டும்; அவ்வளவுதான் என்று உணர்ந்தது அரசர் உள்ளம்.

ஸ்வாமி! இன்றைய விகாரம் இன்றோடு தீரும்; நாளை யும் அந்நினைவு எழுந்தால், சொல்ல நாணுவீர். இதைவிட மங்கை ஒருத்தியைத் தேடி மணஞ் செய்து வைக்கிறேனே!

மணமா? அடடா! அது மாபெருந் தொல்லை அல்லவா! தாலி கட்டையிலே தொடுத்து நடுக் கட்டையிலே வைக்குமட்டும் கவலை! அந்த வில்லங்கமே வேண்டாம். இன்றோடு சாந்தியடையும் என் மனம். புனித உதவி இவ்வளவு செய்தால் போதும். பேய் கொண்டாலும் கொளலாம்; என்றும் பெண் கொள்ளல் ஆகாதே என்பர் பெரியோர்.

அப்படியா! சரி சரி ஸ்வாமி! அதோ இருக்கும் அறை யில் தங்கியிரும்! எண்ணப்படியே தங்கட்கு ஏற்பாடு செய்கிறேன்.

அரசர் ஏவலில் பணியாட்கள், மற்றும் அமைச்சர்கள், உருத்ர கணிகையர் வீதிதோறும் உழன்றனர். அவர்கள் வீடுதோறும் அடியவர்கள்; எவரும் தனியில்லையென்று

திரும்பி வந்து கூறினர். பாதி இரவு கழிந்தது; பயன் இல்லை. வாக்குத் தவறுகிறதே என்று வருந்துகிறது மனம்.

அரசர் வாடிய முகத்தை அரசியர் அறிந்தனர். விஷயம் விளங்கவில்லை. கேட்க அஞ்சினர். நேர்வந்தனர். வணங்கி எழுந்தனர். முகத்தை நோக்கினர். மன்னர் அப்போதும் வாய்திறந்திலர். தேவியர் இருவர்க்கும், பேசும் துணிவு பிறந்தது.

பெண்மையின் பெருமை

குவலயம் காக்கும் எங்கள் கோவே! தங்கள் முக வாட்டம் எங்கட்கு அதிக கவலையை அளிக்கிறதே! சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்றெண்ணி, அருந்துயர்க் காரணத்தை எங்கட்கு அறிவிக்க முடியுமா?

மாதவர் ஒருவர் மாதர் மயக்கில் மனம் வைத்தார். குறிப்பாக அதைக் கூறினர். நாணாது உரைத்தது கேட்டு இரங்கியது எமது இதயம். கணிகையர் இல்லந்தோறும் கண்ணுதல் அடியர் உளர். அண்ணுமலையில் இன்று என்னவோ இப்படியொரு அதிசயம் நிகழ்ந்துளது. வாக்குத் தவறுகிறதே என்று வருந்துகிறது மனம்.

அப்படியா செய்தி! ம்....ம்....ம் என்று ஆலோசனையில் ஆழ்ந்தனர் அரிவையர்.

விரகமுற்ற அடியவர்க்கு வாக்களித்த வேந்தே! உமது திருவுளம் எப்படியோ அறியேன். தங்கள் வாக்கு நிறைவேற வேண்டும்; அதுவே என் குறிக்கோள். இரு தேவியருள் சிறியவள் அடியேன். வேறுவழி யில்லையேல், என்னை அவர்க்கு இசைவித்தால் உடன்படுகிறேன்.

சத்திய சம்பந்தம்

தலை குனிந்து துணிந்து சொன்ன இளையாள் பதில் கேட்டு, உரிய மன்னர்க்கு உடல் சிலிர்த்தது. உள்ளத்தில் உவகை துள்ளியது. உயர்ந்த அவள் தியாகம் கண்டு உருகியது மனம்.

பெண்கள் திலகமே! அடுத்த அறையில் அடியவர் உளர் என்று பட படத்துப் பகர்ந்தார். ஓட்டம் பெரு நடையாக ஓடினர். வருகிறாள் ஸ்வாமி ஒரு வநிதை என்றார்.

உத்தமனும் பெரியவர்க்கு உரைத்திட்டானல் என்று, புனித உணர்வொடு இதனைப் புகல்கிறது புராணம்.

சீ, இப்படியுமா ஒரு கதை? உரியாளை உதவுவானுக்கு உத்தமன் என்று பட்டம். நாணுது நடுங்காது ஏற்பானுக்குப் பெரியவர் என்று பெயர். விபரீதமாக இருக்கிறதே என்று பட படக்கிறது நம் பகுத்தறிவு.

ஏ நாசகரமான அறிவே! முடிவு என்னதான் ஆகிறது என்று பொறுத்துப் பார்த்துத் தீர்ப்பளித்தால் ஆகாதோ என்கிறது, அருளுணர்வு. ஆம், அதுதானே நியாயம்!

நீராடினள். ஆடை யணிகளால் கோலம் செய்து கொண்ட கோதை, பால் பழ வகைகள், வீணை முதலிய வற்றுடன் பள்ளி யறையுள் படர்ந்தாள். படுத்திருக்கும் அடியவரைப் பார்த்தாள். அண்மையில் அமர்ந்தாள்; விழித்திலர் அடியார். சுருதி கூட்டி, பயனுன கீதம் பாடினள். அப்போதும் அவர் எழுந்திலர். பக்கலில் நெருங்கிப் பார்த்தாள். கடுமை நித்திரை என்று கண்டாள். தெளிந்த பன்னீரை அதிகம் தெளித்தாள். என்ன அதிசயம்! அப்போதும் கண் திறந்திலர் அக்கள்ளர்.

கொக்கரக்கோஒவ்! என்று கூவியது கோழி. ஓ! பொழுது விடிந்து விடும்போல் இருக்கிறதே! மன்னர் வாக்குத் தவறுவதோ ஐயோ! என்று கண்ணீர் சிந்தினள். பதி வாக்கு நிறைவேற, படுத்திருந்தவர் மேல் மெல்லச் சாய்ந்த அம்மெல்லியல், ஏந்தலே! என்று அவரை இரு கைகளாலும் தழுவினள்.

திரோபவம்

என்ன வியப்பு! எங்கே சங்கமர்? ஏந்தலே என்று தழுவிய கைகட்கு, ஏந்தும்குழவி ஒன்று எதிரில் இருந்தது.

அதோ பாருங்கள், குவா குவா என்று கை கால் உதைத்துக் குலுங்கி யழுகிற குழந்தையை! அதைக் கண்டு, கட கட என்று ஆடியது சல்லமா தேவி உடல்.

அடுத்துப் பணி செய்ய அறையின் வெளிப்புறத்தில் இருந்த அரசர், குழவியின் குரல் கேட்டதும் மல்லமா தேவியுடன் ஓடிவந்து உள் நுழைந்தார். சேயைக் கண்ட

தம் சிலிர்த்தது மேனி. ஏது இச்சேய்? எங்கே சங்கமர்? அதைக் கேட்க வேண்டும் என்றே தோன்றவில்லையே.

சேயை வாரி எடுத்தார்; மார்பில் அணைத்தார். முத்த மழைபெய்து, அப்ப! அப்பா என்று உவகை மிகுந்து உச்சி மோந்தார். இன்பக் களியில் தன்வசம் இழந்தார்.

பளிச்சிட்டது ஒரு மின்னல். மறைந்தது மகவு. ஐயோ! எங்கே குழந்தை? அரசர் கையில்தானே இருந்தது? அல்லல் எய்தினள் மல்லமா தேவி. ஆ என்று அலறினள் சல்லமா தேவி. பார்த்திபர்க்கு மனம் பதைத் தது. ஆடியது உடல். அடுத்துத் தெளிந்த அரசர், இது திருவருட் செயல் என்று தெளிந்தார்.

லோக நாயகா! ஜெகதீசா! சிவப் பிரகாசா! தளிர்த்த பிறையொடு கங்கை தாங்கியோனே! மான் மழு சூல கபாலா! மறைபுகழ் சீலா! சோதனை செயவோ மக வாகித் தோன்றி மறைந்தீர்! எம் கதி என்னேஎஎஎ என்று, மனைவியருடன் கோவெனக் கதறினர் கோபதி.

அநுக்ரகம்

மலர் மழை பெய்தது வானம். அம்மாஅஅஅ! என்ற அழைப்பு, அந்தரத்தில் எழுந்தது. யாவரும் வானம் நோக்கினர். விடை மேல் தேவியுடன் விமலன், பேரொ ளிப் பிழம்பாய்ப் பிரகாசிக்கின்றான். சிவ கணத்தவர், ஹர ஹர கோஷம் செய்தனர். கண்ட காவலர், தேவியருடன் கை குவித்துக் கும்பிட்டார்.

ஆதியே! அடியவரைக் காக்கும் சோதியே! பாதிமதி யணிந்த பரமா! தரணியைத் தாங்க அருள்க ஒரு சேயை அத்தாஅஅஅ! என்று விம்மி யழுகிறார் வேந்தர்.

மன்னு! மன்னு வாழ்க்கையில் உனக்கு மகவுப் பித்து. இடர்ப்பட வைக்கும் கர்மத் தொடர்பு இல்லாதவன் நீ. பிள்ளைப் பேறு எப்படிப் பிறக்கும்? வாய்த்திலது மகவு என்றும் வாளா இருந்திலே! அரிய உன் ஏக்கம் அறிவோம்!

குருபரன் அருளால் குழவியும் உண்டாம்!
கொற்றவா! செல விடை தருவாய்

என்று, குறிப்பாக நாரதர் வாக்கில் நின்று குறிப்பித்தோம்.

தூய குழந்தை தோன்றும்; மகிமையுடைய அச் சேய் உடனே மறைந்துவிடும் என்ற அச்சொற் பொருளேயும் அறிந்திலே. பாவமே செய்தவர் அபுத்திரனைப் பெறுவர். புண்ணியம் பாவம் இரண்டும் செய்தவர் புத்திரனைப் பெறுவர். புண்ணியமே செய்தவர் சத்புத்திரனைப் பெறுவர்.

முன்னைய ஊழான இம்மூன்றும் இல்லாமல், சிவ புண்ணியமே செய்த உனக்கு யாமே சேயானேம். நிலத்தைத் தாங்கல் எமது நியதி. வீணான கவலே உனக்கு வேண்டா. இறுதியில் உங்கட்கு எள்ளும் நீரும் யாமே இறைப்பம்.

காமப் பித்தரையும், கடவுள் பித்தராக்கும் பாடல் ஆடலில் பயின்ற கணிகையர், அருந்ததிக்கு ஒத்த கற்பினர்.

கணவர் வாக்கைக் காக்க, தன்னையே துறக்கும் தன்மைக் கற்பினள் சல்லமா தேவி. அவட்குப் பின்வாங்கா அருள்நெறியள் மல்லமா தேவி. உங்கள் வரலாற்றை உலகம் உணர்ந்து உய்தி பெறவே, கனிவிக்கும் ஆடல் பலவும் காட்டினேம்.

ஆங்காரம் தவிர்க்க நாம் எழுப்பிய ஓங்கார நாதத்தை, அமைதி மனத்தர் என்றும் அண்ணுமலேயில் அறிவர் காண்! என்று அருளி, உருக்கரந்தார் உமாபதி. அரச தம்பதிகள், அவ்வளவில் அளவில் இன்பம் அடைந்தனர்.

திருவிளேயாடல்

அரண்மனையில் ஒரு நாள், உணவு கொள்கிறுர் அரசர். எதிரில் தேவியர் இருக்கின்றுர். கலகல நகை செய்து, தண்டை ஒலிக்க ஓடி வந்தது ஒரு மகவு.

என்ன அருமை! என்ன அழகு! ஏது இச்சேய்? நினைக்கவே நேரம் இல்லேயே!

பார்த்திபர் உண்கலத்தில் கையிட்டான் பாலன். தடுத்திலர் தாணிபர். பிரியமாகச் சோற்றைப் பிசைந்தான். எடுத்தவற்றில், நிலத்தில் சிந்தின சில பாகம். உடையில் சிந்தின சில பகுதி. எஞ்சிய சில பருக்கைகளே வாயில் இட்டான். வேந்தர் இது கண்டு, தேவியருடன் விழுந்து விழுந்து சிரித்தார்.

உண்டபின் சுத்தி செய்தனர். மகாராணியர் தாம்பூலம் மடித்துத் தர, வாங்கிய மைந்தர், ஆ என்று தந்தையின் திறந்த வாயில் தந்தார். பூரித்துப் புளகித்த பூபதி, வாரி யெடுத்து முத்தமளித்து, உச்சி மோந்து உணர்ச்சி வசமாயினர்.

மைந்தர் திடீரென்று மறைந்தார். திடுக்கிட்டார் வேந்தர். இப்படியே நினைக்கும் நேரமெல்லாம், மகா ராணியர்தம் மார்மேலும், மன்னர் தோள் மேலும், திடீர் திடீரென்று தோன்றி விளையாடி மறைந்தார் அம் மைந்தர்.

கலப்பு விழா

மாசி மாதம், மக நட்சத்திரம். ஆம். அன்று அமலனை வழிபட்ட பின், அரசர் வாய், ஹர ஹர ஹர ஹர என்று முணகியது. அவ்வளவில், உயிர் அவர் உடலைவிட்டு அகன்றது. வித்தக உடல் நிலத்தில் வீழ்ந்தது.

அவ் வழிபாட்டில் உடனிருந்த அரசியர், அரசர் நிலை கண்டு அலறினர். வேந்தேஎஎ! என்று அவர் மேல் வீழ்ந்தனர். மீட்டும் எழுந்திலர். உத்தம பதியின் உயிர் தேடினபோல் பாவையர் உயிரும் பறந்தது.

அண்ணாமலைக் குடிகள், விவரம் அறிந்து அலறினர். அரச குடும்பத்துச் செய்தி இதுவென, அமைச்சர் அறிக்கை அனுப்பினர். அண்ணாமலையார் திருமுன் அர்ச் சகர்கள், வந்த ஏட்டை வாசித்தனர்.

அம்மேஎஎ! அப்பாஅஅஅ! என்று ஒரு நாதம் எழுந்தது. அடுத்து இலிங்கத்தி லிருந்து, ஒளி மேனி மைந்தர் ஒருவர் எழுந்தார். ஓட்டம் பெரு நடையாய் ஓடினார். அரச மாளிகையை அடைந்தார். புனிதரான மூவர் மேலும் விழுந்து புரண்டார்.

ஈமச் சடங்கு நடந்தது. கண்டவ ரெல்லாம் கண் மழை பொழிந்தனர். உரிய காலத்தில் மைந்தர், தம் கரத் தால் தாமே உத்தர கிரியையும் நடத்தினர். அதன்பின் யாவரும் காண, மாபெரும் சோதியாகி மைந்தர் திருமேனி மறைந்தது. அதன் பிறகுதான், சடங்கை நடத்திய சதுரர், அண்ணாமலையார் எனும் செய்தியை எவரும் அறிந்

தனர். என்னே அமலன் மறைப்புச் செய்யும் அற்புதம்! என்று இன்பக் கண்ணீர் சிந்திக் கை குவித்தனர் அன்பர்கள்.

தெய்வம் குறித்த திருவிழா

ஆண்டுதோறும் மாசி மகத்தன்று இத் திருவிழா ஆலயத்தில் நடைபெறும். நாம் மகவாகி வெளிப்பட்ட வாயில் வல்லாள மகாராஜா கோபுரம் என்ற பெயர் பெறும். தெய்வ அவ்வாயில், மாசி மகத்தில் மட்டும் திறக்கப்பெறும் என்று இனிய ஒரு நாதம் விண்ணில் எழுந்தது. அன்னை பிதா இல்லாத அத்தர்க்கு, அம்மே அப்பா என அழைக்க மன்னர் குடும்பம் ஒன்று இம் மகிதலத்தில் அமைந்ததும் ஒரு அற்புதம் 'அல்லவா! அண்ணாமலையார் பிதுர்த் தர்ப்பணம் நடத்தும் மாசி மக நள்ளிரவில், அம்மேஎஎஎ! அப்பாஅஅஅ எனும் இனிய நாதத்தை, இன்றும் கேட்கிறோம் நாங்கள் என்று இறுமாந்து கூறும் அனுபவிகளே, இந்த இருபதாம் நூற்றாண்டினும் கண்டு வணங்கிக் களிப்பவர்கள் நாம்!

வாழ்க சிவனூர் அடியவர்!

BACK-WATERS OF ANANDA

Travancore is a fine country - one of the finest, I should say. It is mounted on the top of the confluence of three oceans, the Indian Ocean, the Arabian Sea, and the Bay of Bengal. At this enchanting spot is built the temple of 'Sri Kanya-kumari, the guardian angel of the lives of the sea-world on the south and the picturesque country set up to the north and west. . This point Cape Comerin is celebrated for the glory of

sun-rise and sun-set. As the ocean winds round the Cape to the west, nature unveils many of the best charming spots on the face of the earth, where land dressed in green with the profuse leaves of cocoanut plantations is wooed and embraced by the mighty arms of the ocean, exhibiting the billowy foams of irrepressible love on the coveted shores of the main land. The ocean flood has cut innumerable ravines, some of them very deep, into the heart of the country. The beauty of Venice with its roads of water-ways and the joy of honey-moon of two great lovers—land and sea, strike the mind of the onlooker. Is this the land of Adam and Eve!

Nature here has unfolded a parallel to the realisations of Saints in our lands. Humanity represents the back-waters of Divine Ananda. The Upanishads instruct us that the essential nature of God and the Atman is ananda. God is the ocsan of Ananda and man is but a back-water. Countless back-water streams of the God-ocean fill the innumerable lives on earth. There is no Ananda or sense of joy in the world which is not traceable to the waters of Ananda of God. The heart of man is the Lord's back-water. He who sees the Lord within his own heart, will be able to see Him everywhere. So said the saints.

The realisation of spirituality is conditioned on some vital points of belief and conduct. The first essential requisite for a rise in spirituality is the firm conviction and the unalterable belief in the existence of God, the one God for all the universe. The second requisite is that there is a silken chord that knits all beings with the Lord of the universe. It is never the case of a man

establishing or creating a contact with God, but only the rccognition of a contact already existing, and the search is only the search of how best that contact can be made to profit humanity. The intellectual conviction may be sufficient to fulfil the two requisites just mentioned. The third and the most universal requisite is to aequire an yearning, an insatiable attraction towards God, to know Him, to serve Him, to love Him and to become one with Him. The Lord lives everywhere. All beings are His tabernacles. To love and serve all life is the best means of spiritual realisation. This conceded, the condition of the heart and the intellect working in unison on this platform becomes Bhakthi. This is what one finds in Radhakrishna, Siva and Parvathi, Valli and Kumara, Sakti and Sivam and so forth. The names may be different, but the vibration of the name sets in motion the vibration of the heart and intellect, and this religion of Bhakti is the one religion of the world. Denominational religions are but phases of this universal religion of Bhakti. Victory never failed the votaries of this religion aud wherever you find Bhakti in any denominational religion, it has always led the Bhaktas to the Universal and they have become the Saints for all the world over.

May **Bhakti** rule the world and bring it into the atmosphere of **Peace** and **Love** everlasting.

(*Thiruppugal Mani*)

மூலநிலந் தனிலிருந்தாய் ; மும்மலத்தால்
உயங்குமுயிர், முதலே யென்னச்,
சிலநலம் அளித்தொளிர்மெய்ச் சிறப்பளித்துத்
துதிக்கைகொடு செவ்வே ஏற்றி,
மேலதலம் கண்டிடெனப் படியேற்றி
மதியமுதம் மெத்த ஊட்டும்
பாலநல கணபதி! தின் பாதார
விந்தஅருள் பார்க்க வாமோ!

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
„ 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளியெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் „			
முருகனடியார் „			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami